பக்கங்கள்:-பன்னிரண்டு
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 19 | சனிக்கிழமை | (03-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 15

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# பொலிஸாரின் நடவடிக்கையில் மக்களுக்கு நம்பிக்கையில்லை

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த இவ்வருடத்தில் புதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப் போவதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அறிவித்துள்ளார்.**

மேலமாகாண சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்

அவர் அங்கு மேலும் கூறுகையில்; இலங்கையில் இடம்பெறுகின்ற வன்முறைகளில் 45 வீதமானவை மேல்மாகாணத்திலேயே இடம் பெறுகின்றன. இதனால் புதிய திட்டத்தை முதலில் மேல்மாகாணத்திலேயே நடைமுறைப்படுத்தப் போவதாகக் கூறினார்.

பொலிஸ் சேவையில் உள்ளவர்கள் தனிப்பட்ட நலனில் அக்கறை கொள்ளாது, நாட்டின் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டால்தான் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும்.

நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டுமானால் நேர்மையாக சுயாதீனமாக சேவையாற்றக் கூடிய பொலிஸ் சேவை ஒன்று அவசியம்.

தற்போதைய பொலிஸ் சேவை குறித்து மக்கள் மத்தியில் நல்ல நம்பிக்கையோ எதிர்பார்ப்போ இல்லை. அதற்குக் காரணம் பொலிஸாரின் நடவடிக்கைகள்.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, பொது மக்களின் நலன்களைப் பேணுவதே பொலிஸாரின் கடமை,

எனினும் தனித்து பொலிஸாரினால் மாத்திரம் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியாது. அதற்கு பொது மக்களின் ஆதரவும் அவசியம்.

தற்பொழுது நாட்டில் எங்கும் வன்முறைகள் இடம்பெறுகின்றன. வன்முறைக் கலாசாரம் பரவியுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடபிராந்திய பேருந்தைச் செல்லவிடாது மினிபஸ்ஸை வீதியில் நிறுத்தி சாரதிகள் வழிமறிப்புப் போர்

(காரைநகர்)

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச சொந்தமான பேருந்தைப் பயணிக்க விடாது தமது வாகனங்களை வீதியின் நடுவே நிறுத்தித் தனியார் மினிபஸ் சாரதிகள் வழிமறிப்பில் ஈடுபட்டனர். அத்துடன் பேருந்தின் சாரதியையும் தாக்க முற்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் காரைநகர் புதுறோட்சந்தியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்குச் சென்று கொண்டிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் 18 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 18 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நேற்று ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இவர்களுடன் கடந்த 31ந்திகதி கைது செய்யப்பட்ட 6 மீனவர்களும் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 16ந் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. இவர்கள் அனைவரும் யாழ்.சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயன்படுத்திய படகுகள் உபகரணங்கள் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

## முஸ்லிம்களின் உரிமைக்கு முதலிடம் தரும் கட்சிக்கே முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு

### கட்சியின் உயர்பீடம் இரகசியமாகக் கூடி முடிவு

(கொழும்பு)

**முஸ்லிம்களின் அபிலாசைகளுக்கும், கோரிக்கைகளுக்கும் உரிமைக்கும் மதிப்பளிக்கின்ற கட்சிக்கே, தமது ஆதரவை வழங்குவதென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் முடிவு செய்துள்ளது.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் முடிவு செய்துள்ளது.

இவ்விடயம் குறித்து கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் மத்திய குழு இரகசியமாகக் கூடி மேற்கண்டவாறு முடிவு எடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

முஸ்லிம்களின் பேரம் பேசும் உரிமைகளைப் பலப்படுத்தும் வகையில் எதிர்வரும் தேர்தலில் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளுக்கு முதனமை அளிக்கின்ற கட்சி ஆட்சி அமைக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவை வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இனப் பிரச்சினைத் தீர்வில் அதன் பேச்சுகளில் முஸ்லிம்களை மூன்றாம் தரப்பாக ஏற்றுக் கொள்ளல், முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், முஸ்லிம் மக்களின் உரிமைகள் மற்றும் முஸ்லிம்களின் அரசியல் அங்கத்துவத்தை மதிக்கின்ற, அதனை ஏற்றுக் கொள்கின்ற கட்சிக்கே, ஆட்சி அமைக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

# மிருசுவில் முதல் யாழ்.வரை வீதி புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் முதல் யாழ்ப்பாணம் வரையான 30 கிலோமீற்றர் நீளமான யாழ் கண்டிவீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது வீதியை அகலமாக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பதால் மேற்படி வீதிப் பகுதிக் காணி உரிமையாளர்கள் அதனை அகலமாக்க உதவ முன் வரவேண்டும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் புனர்வாழ்வுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழேயேஇவ் வீதிப் புனரமைப்பும் இடம்பெறவுள்ளது. (இ-4)

# நாரந்தனை கொலைவழக்கு மேல் நீதிமன்றுக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்மீது நாரந்தனையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ்.மேல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு சம்பந்தமான குற்றப்பகிர்வு சட்டமாதிபர் திணைகளத்தினால் மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் விசாரணைகள் ஆரம்பமாகும்.

2001 நவம்பர் மாதம் இடம் பெற்ற மேற்படி தாக்குதல் சம்பவத்தில் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் இருவர் உயிரிழந்திருந்தனர். இவ் வழக்கு விசாரணைகள் இதுவரை காலமும் யாழ்மாவட்ட நீதிமன்றில் நீதிவான் இ.த. விக்கினராஜா முன்னிலையில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.(த-3)

# சார்க் மாநாடு நாளை ஆரம்பம்

## ஜனாதிபதி சந்திரிகா பங்கேற்பு

(கொழும்பு)

சார்க் நாடுகளின் உச்சி மாநாட்டில் இலங்கை சார்பாக இம்முறை ஜனாதிபதி சந்திரிகா பணடாரநாயக்க குமாரதுங்க கலந்துகொள்ளவுள்ளார்.

சார்க் நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான குழுவொன்று இன்று பாகிஸ்தான் செல்லவுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சார்க் உச்சி மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று தினங்கள் வரை பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ.18.61)

# ஜே.வி.பி கூட்டு அமைப்பது ஸ்ரீ.சு.கட்சியை அழிப்பதற்கே

## எம்.பிகள் குழு ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டணி அமைக்கும் போது அவர்களின் கடினமான நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவிக்க வேண்டாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு ஒன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக சந்தன கத்திரியாராய்ச்சி இது பற்றி கருத்து தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கூட்டணி அமைக்கும் பட்சத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தூய்மை ஒரு தன்னலத் தேவை

# அதில்லாவிடத்து ஏற்படும் தீமை

டாக்டர்
என்.சுலோசனா

ஒரு நாட்டின் நல்வாழ்வைக் குறிக்கும் அளவுகோலாக விளங்குவது மக்களின் உடல் நல மேம்பாடே ஆகும். உடல் நலத்தின் தரம், மக்கள் தங்கள் இருப்பிடத்தையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்வதில் உள்ள தன்மைகளைப் பொறுத்து மேம்படுகின்றது.

நம் நாட்டின் இறப்பு விகிதங்களில் மூன்றிலொரு பங்கு தொற்று நோய்களின் காரணமாகவே ஏற்படுகின்றது. முக்கியமாக வயிற்றுப் போக்கு, வாந்தி, சீதபேதி, காசநோய் **(T.B)** போன்ற நோய்களால் தாக்குண்டு மக்கள் மடிகின்றனர். தொற்று நோய்கள் பரவுதலை எளிதில் தடுக்கமுடியும் என்பதனைச் சரிவரப் புரிந்து கொள்வோமேயானால் எண்ணற்ற உயிரிழப்புகளை உறுதியாகத் தவிர்க்க முடியும் என்பது விளங்கும்.

நாம் உள்ளிழுக்கும் காற்று, குடிக்கும் நீர், உண்ணும் உணவு யாவும் தூய்மையாக இருக்கவேண்டும். இவை தூய்மையாக இல்லாவிட்டால், நம் கண்ணுக்குப் புலப்படாத நோய்க்கிருமிகள் உடலுக்குள் சென்று, தொற்றுநோய்களை நம்மிடையே உண்டாக்கும். மனிதன் தூய்மையாக வாழப் பல்வேறு வசதிகள் தேவைப்படுகின்றன.

முதலாவதாக உறைவிடம், வெயில், காற்று, மழை முதலியவற்றுக்கு ஒதுங்குமிடமாக மட்டுமன்றி, உடல் நலத்தையும் அளிக்க வல்லதாக அது அமையவேண்டும்.

இரண்டாவதாக தண்ணீர். தண்ணீர் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. நமது புற உடலின் தூய்மை தண்ணீரால் உண்டாகும். இதைத்தான் திருவள்ளுவர்,

**''புறத் தூய்மை நீரான் அமையும் அகந் தூய்மை வாய்மை யாற் காணப்படும்''**

என்று கூறியுள்ளார். நன்றாக, தூய்மையாகக் குளிக்காவிட்டால் வியர்வைத்துவாரங்கள் அழுக்கால் அடைக்கப்பட்டு, வேர்க்குரு போன்ற தோல் நோய்களும் துர்நாற்றமும் ஏற்படும். சாப்பிட்ட பிறகு வாயைத் தண்ணீரினால் கொப்பளிப்பது இன்றியமையாதது. இல்லாவிட்டில் பல் நோய்கள் வர வாய்ப்புண்டு. பற்களில் அமிலத்தை உண்டாக்கும் பற்றீரியாக்கள் வளர்ந்து பல்லில் சொத்தையை ஏற்படுத்தும்.

பல இடங்களில் தூய்மையற்ற தண்ணீர் குடிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. குடிநீரினைக் கொதிக்க வைத்து அருந்தி வந்தால் நீரில் உள்ள நோய்க்கிருமிகள் அழிந்துவிடுகின்றன. குடிநீரில் நமது உடல் நலத்தைக் கெடுக்கக் கூடிய வேதிப்பொருட்கள் மற்றும் தாதுப்பொருட்களோ அல்லது நோய் உண்டு பண்ணும் அணுக்களோ இருத்தல் கூடாது. நீர் தெளிந்ததாகவும், நிறமும் மணமும் அற்றதாகவும் இருக்கவேண்டும். எனவே சுத்திகரிக்கப்பட்ட நீரை அருந்துவதே நோயிலிருந்து பாதுகாக்க வழிவகை செய்கின்றது.

அடுத்ததாக நீரின் தூய்மையைக் கெடுக்கும் அணுக்களைப் பற்றிப் பார்ப்போம்: மனிதனின் கழிவுகள் மூலமும் விலங்குகளின் மூலமுமே நீர் தூய்மைக்கேடு அடைகின்றது. கோலிஃபார்ம் (**Coliform**) எனப்படும் பற்றீரியாவின் எண்ணிக்கையை வைத்துத்தான் தண்ணீரின் தூய்மை அளவிடப்படுகின்றது.

நீர் எடுக்கும் இடத்திற்குப் பக்கத்திலேயே மலம்-சிறுநீர் கழித்தல், குளித்தல், துணிகளைத் துவைத்தல், பாத்திரங்களைக் கழுவுதல், நீர் சேகரித்து வைக்கப்படும்போதும் கூட அசுத்தமடையலாம். நல்ல - தூய நீராக இருந்த போதிலும், தூய்மையற்ற பாத்திரத்தில் வைக்கும் போது தூய்மை இழந்துவிடும். பாத்திரங்களைச் சுத்தமாகக் கழுவாவிட்டாலும், தூசுவிழுவதாலும், ஈ, பல்லி, எலி மற்றும் பறவைகளின் எச்சம் முதலியவை மூலமும் நீர் தூய்மை கெடலாம். தூயநீர் நல்ல பாத்திரத்தில் பாதுகாக்கப்பட்டாலும் அசுத்தமான பாத்திரத்தைக்கொண்டு அதை எடுக்கும் போது நீர் களங்கமடைவதுடன், நோயுண்டாக்கும் தன்மை உடையதாகவும் ஆகிவிடலாம்.

வாந்திபேதி, கொலரா, தைபோயிட்டு (**Typhoid**) வயிற்றுப் போக்கு முதலியன நீர் மூலம் பரவக்கூடிய நோய்கள். இவை நீரில் நோய் அணுக்கள் பெருகுவதன் மூலம் ஏற்படக்கூடியவை. இரை, கொக்கிப்புழு, அமீபா மூலம் ஏற்படும் நோய்களும் இவற்றில் அடங்கும்.

மேலும், **Polionyelitis** என்ற இளம் பிள்ளை வாதம், **Infective Hepatitis** என்ற மஞ்சல் காமாலை ஆகியனவும் நீர் மூலம் பரவும் வைரஸ் அணுக்களால் பரவுகின்றன. இவற்றைத் தடுக்க நீரை நன்றாக ஐந்து நிமிடங்களாவது கொதிக்கவைக்க வேண்டும். இந்த நீரைத்தான் குழந்தைகளுக்கும் கொடுக்கவேண்டும்.

### கழிவு நீர் நீக்கம் செய்தல்

கழிவு நீர் பலவிதங்களில் உண்டாகும். வீட்டில் சமையல் அறையிலிருந்தும் குளியல் அறை யிலிருந்தும் துணி துவைத்து, பாத் திரங்களைக் கழுவும் போதும் கழிவு நீர் வெளியேறுகின்றது. மாட்டுத் தொழுவங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீர், சந்தைகள், கசாப்புக் கடைகள், திருவிழா நடக்கும் இடங்கள், நீரால் இயங்கும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நீர் முதலியன தேங்கி நின்று கொசுக்களைப் பரப்புகின்றன. கொசுக்கள் மட்டுமன்றி வேறு புழு, பூசசிகளும் நீர்தேங்கி நிற்கின்ற இடங்களில் பெருகும். இது வீடுகளின் அருகில் இருந்தால் துர்நாற்றமும் ஈரப்பசையும் தந்து நலவாழ்விற்குக் கேடுவிளைவிக்கும்.

கிராமங்களில் மனிதர்கள் வாழும் இடத்தை ஒட்டியே கால் நடைகளும் சேர்ந்து வசிப்பதைக் கருத்தில் கொண்டால், இப் பிரச்சினையின் ஆழத்தை ஒருவாறு உணரலாம். எனவே, பொதுமக்கள் கழிவு நீரை தூரத்தில் கொண்டு செல்ல வடிகால் கட்டவேண்டியது அவசியம். கிணறுகளில் கழிவு நீர் ஒழுகிச் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கழிவுநீரைத் தோட்டத்திற்குப் பாய்ச்சலாம். இதன் ஓடைகளை நல்லமுறையில் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு சமயங்களில் வளர்க்கக் கூடிய காய்கறிகளைப் பயிரிடவேண்டும். வாழையும் பப்பாளியும் சமயல் தோட்டத்திற்கு ஊகந்தது.

கொசுவினால் மலேரியாக் காய்ச்சல், ஃபைலேரியாஸிஸ் என்ற யானைக்கால் நோய் ஏற்படுகின்றது என்பதை மனத்தில் கொண்டு கொசு அதிகம் உள்ள இடங்களில் மக்கள் கொசுவலையைப் பயன்படுத்த வேண்டும்.

### மலம், சிறுநீர் கழிவுகளை அப்புறப்படுத்துதல்

பெரும்பாலும் தொற்று நோய்கள் நோயாளிகளின் மலசலம் மூலம் வெளிப்படும் நோய் அணுக்களால் தான் பரவுகின்றன. இவை ஈக்கள் வழியாகவும் நீர் அசுத்தப்படுவதாலும் ஏற்படுகின்றது. உரத்திற்காக இடப்படும் மண், சாணி முதலியவற்றில் இருந்து பரவும் நோயணுக்கள் படிந்துள்ள காய்கறிகளை சரியாகக் கழுவாமலும், நன்றாகச் சமைக்காமலும் உண்ணும் பொழுது நோய் பரவுகிறது. மலம் கழித்த பின் கைகளைச் சுத்தமாகக் கழுவிய பின்தான் உணவு உண்ண வேண்டும். இல்லையென்றால் நோயணுக்கள் வயிற்றுககுள் செல்ல வழி உண்டாகிறது.

கொக்கிப் புழு இருக்கும் மண்ணில் செருப்பில்லாமல் நடந்தால் கொக்கிப்புழு உடம்பினுள் புகுந்து விடும். நகரங்களில் மலக்கழிவுகளை அகற்றுவதற்காக நகர் மன்றத்தின் பொறுப்பில் கழிவு அகற்றும் பணி இயங்கும் போது கிராமப் பகுதிகளில் இது ஒவ்வொரு வீட்டுக்காரருடைய பொறுப்பாகின்றது.

வீட்டிற்குச் சற்று ஒதுக்குப் புறமாக ஓரிடத்தில் 4 அல்லது 5 அடி ஆழத்தற்குக் குழிதோண்டி அதைச் சுற்றி ஓலையால் மறைவு கட்டி, ஒவ்வொரு முறையும் மலம் கழித்த பின்னர் சிறிது மண்ணைத்தூவினால் நாற்றமும் இருக்காது, ஈக்களும் மெய்க்காது. அதிகச் செலவும் ஆகாது. மேலும், தற்பொழுது **Reap** எனப்படும் நவீன முறை கழிப்பிடங்கள் அதிகச் செலவின்றி அரசுத்துறை மூலமாகக் கட்டிக்கொடுக்கப்படுகின்றது. சொந்தமாகக் கழிப்பிடம் உபயோகப்படுத்தும் போது சுத்தமாக வைக்கவேண்டும் என்ற பொறுப்பு வீட்டுக்காரருக்கும் உண்டாகும்.

### குப்பை கூழங்களை அகற்றுதல்

குப்பை கூழங்கள், சமயலறையில் உள்ள மிச்ச மீதிகள், காய்கறிகள், மீன், இறைச்சி முதலியவற்றின் கழிவுகள், கன்று மற்றும் கோழித் தீவனங்களின் மிச்சங்கள் முதலியவை அழுகி நாற்றம் உண்டாக்குவது மட்டுமல்லாமல், புழு, பூச்சிகளை ஈர்க்கவும் செய்கின்றன. வீட்டுக்கு ஒரு எருக்குழி என்பது இலட்சியமாக இருக்க வேண்டும். வரைமுறையின்றி குப்பை கொட்டக்கூடாது. குப்பைகளை எரித்துச் சாம்பலாக்கவேண்டும் அல்லது தொட்டிகளில் கொட்ட வேண்டும். குப்பைகளை உரமாக்கியும் பயன்படுத்தலாம்.

மனிதனைத் தாக்கும் கொடிய நோய்களில் வாய்ப்பூட்டு நோய் எனப்படும் வில்வாத ஜன்னி (**Tetanus**) நோயும் ஒன்று. இந்நோய்க் கிருமிகள் மண்ணில் அதிகம் உள்ளன. உடலில் ஏற்படும் ஏதாவது ஒரு காயம் மூலம் அவை உட்புகுந்து நோயை ஏற்படுத்தலாம். பல இடங்களில் தூய்மையான வழிமுறைகளைப் பின்பற்றாமல் - கைகளைச் சுத்தம் செய்யாமல் பிரசவம் பார்ப்பதாலும், தொப்புள் கொடியைக் கிருமி நீக்காத தூய்மையற்ற கத்தி, அரிவாள்மனை, அரிவாள், கத்தரிக்கோள், பிளேடு போன்றவற்றால் அறுப்பதாலும் தூய்மையற்ற நூலால் கட்டுவதாலும் டெட்டனஸ் நோய் ஏற்படுகிறது.

அதனுடன், தொப்புள் கொடியின் மீது சாணம், செங்கல் பொடி, சாம்பல், ஓடு, கோப்பித்தூள், பவுடர், எண்ணெய் ஆகியவற்றைத் தடவுவதால் இந்த நோய் அதிக அளவில் ஏற்படுகின்றது. இது முற்றிலும் தவிர்க்கக் கூடிய ஒரு நோய். கருவுற்ற பெண்களுக்கு டெட்டனஸ் டொட்சைட் (**Tetanus Toxo id**) தடுப்பூசி போட்டு, தாய்க்கும் சேய்க்கும் இந்த நோய் வராமல் தடுக்கலாம். தடுப்பூசி எல்லா அரசு மருத்துவமனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் துணை சுகாதார நிலையங்களிலும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் இலவசமாகப் போடப்படுகின்றது. புதன்கிழமை என்றாலே அது தடுப்பூசி போடப்படும் நாள் (**Wednesday is universal Lmmunization day**) ஆகும்.

முடிவாக பொதுமக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே தூய்மையான பாதுகாப்பு முயற்சிகள் வெற்றி பெறும். அறியாமை, அக்கறையின்மைகளை அகற்றி, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து, தூய்மைக் கேட்டை அகற்ற வேண்டும். தூய்மை என்பது ஒரு தன்னலத் தேவை என்று உணர்ந்து, பொதுச் சுகாதார முன்னேற்றத்திற்கு அனைவரும் உறுதுணையாக இருக்கவேண்டும். □

---

# வடகிழக்கு சுகாதார நிலை அடிமட்டத்தை அடைந்துள்ளது

## சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்

(திருநெல்வேலி)

வடக்கு-கிழக்கில் சுகாதார நிலைமைகள் மிகவும் கீழ் மட்டத்தில் உள்ளதாக வடக்கு -கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.குமாரவேற்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற மருந்தாளர் பயிற்சி நெறியை முடித்து வெளியேறியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரை யாற்றுகையில்,

இலங்கையின் வைத்தியத் துறை வளர்ச்சியடைந்தநிலையில் உள்ள போதும், வடக்கு-கிழக்கின் சுகாதார நிலைமைகள் மிகவும் கீழ் மட்டத்திலேயே காணப்படுகின்றன.

இனிவரும் காலங்களில் பெரும்பாலும் சகல வைத்தியசாலைகளும் தனியார் மயப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களே அதிகளவில் உருவாகக்கூடும். அத்துடன் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மருத்துவர்கள் மற்றும் வைத்திய சேவையுடன் தொடர்புடைய ஏனையோருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்நிலைமைகளை மாற்றியமைத்து, வடக்கு-கிழக்கின் சுகாதார நிலைமைகளைச் சீர்செய்யும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட வெளிவாரி மருந்தாளர் சான்றிதழ் பயிற்சி நெறியை முடித்து தற்போது ஒரு தொகுதி மாணவர் வெளியேறியுள்ளனர்.

இதன் அடுத்த கட்டம் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படவுள்ளன எனக் குறிப்பிட்டார். (உ-43)

### விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொழிற்றுறைத் திணைக்களத்தினால் மானிப்பாயில் நடாத்தப்பட்டு வரும் தச்சு வேலைப் பயிற்சிநெறிப் போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்காலிக பயிலுநர் அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ள இந் நியமனத்திற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாத இறுதிக்குள் தமது விண்ணப்பங்களை மாவட்ட அலுவலர், தொழிற்றுறை திணைக்களம, யாழ். செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தொழிற்றுறைத் திணைக்கள மாவட்ட அலுவலர் கேட்டுள்ளார். (உ-4)

---

# இடைநிறுத்தப்பட்ட காரைநகர் -காவலூர் படகுச்சேவை

## அடுத்தவாரம் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இடைநிறுத்தப்பட்டுள்ள காரைநகர் - ஊர்காவற்றுறை இடையிலான படகுச் சேவையை அடுத்த வாரம் அளவில் மீண்டும் ஆரம்பிப்பதற்கேற்ற வகையிலான நடவடிக்கைகள் மிகத் துரிதமாக இடம்பெற்று வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக இலங்கைக் கடற்படையினரால் நடாத்தப்பட்டு வந்த மேற்படி படகுச்சேவையானது கடந்த நவம்பர் மாத பிற்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்ட நிலையில், இயந்திரக் கோளாறு காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதன் காரணமாகப் பொது மக்கள் எதிர்நோக்கிவரும் அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டு மேற்படி படகுச்சேவையைத் திருப்திகரமானதாக முன்னெடுக்கும் வகையில் ஒவ்வொன்றும் 40 குதிரைவலுக் கொண்ட இது வெளியிணைப்பு இயந்திரங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபை கொள் வனவு செய்துள்ளது.

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட வெளி இணைப்பு இயந்திரங்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு, அவற்றை உடனடியாகவே படகில் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்டப் பொறியியலாளர் ஜே.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.


(உ-4)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# பர்வேஷ் முஷாரப் பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார் - புஷ்

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் இரண்டு கொலை முயற்சியில் இருந்து உயிர்தப்பியிருப்



பதால் பயங்கரவாதத்திற்கு எதி ராக அவர் கடும்நடவடிக்கை எடுப் பார் என்று தாம் நம்புவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ். டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று முன் தினம் முஷாரப்புடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பின்பு வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய ஜோர்ஜ்புஷ் பாகிஸ்தான் பாதுகாபபுப் படையினர் பயங்கரவாதச் செயல்களை ஒடுக்குவார்கள் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகத் தெரிவித்தார். பாகிஸ்தானில் உள்ள அணுவாயுதங்கள் பாதுகாப்பாக இருப்பதாகக் கூறிய புஷ், இந்தியாவும் அணுவாயுதத் திட்டங்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்றார்.

காஷ்மீர் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சார்க் மாநாட்டின்போது இதற்கான வழிமுறைகளை இருநாடுகளும் வகுக்கும் என்று தாம் நம்புவதாக புஷ் மேலும் கூறியுள்ளார். (து-9)

# அமெரிக்க-ஈரான் உறவில் புதிய அத்தியாயம்

(வாஷிங்டன்)

அமெரிக்க-ஈரான் இராஜதந்திர உறவுகளிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளபோதும் நிவாரண உதவிகளை வழங்க தற்போது அமெரிக்கா முன்வந்துள்ளது.

இதற்கமைய 80 பேர் அடங்கிய மருத்துவக் குழுஒன்று ஈரான் சென றுள்ளது. இதன் மூலம் அமெரிக்க-ஈரானிய உறவுகளில் புதிய அத்தியாயம ஆரம்பமாகி உள்ளதாக அரசியல அவதானிகள் தெரிவிக்கின்றனர். (து-9)

# கருணாநிதி, மணிசங்கர் ஐயர் சந்திப்பு தேர்தல் கூட்டணி பற்றி பேசப்பட்டது

(சென்னை)

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியுடன் நடத்திய பேச்சுக்கள் சாதகமாக இருந்தன என்று காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான மணிசங்கர் ஐயர் கூறியிருக்கிறார்.

கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசிய பின் செய்தியாளர்களிடம் பேசிய மணிசங்கர் ஐயர் தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட்டணி வைத்துக கொள்வது பற்றி முறைப்படியான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்றார்.

நாட்டில் மதச் சார்பின்மையை காபபதற்காக மதவாதிகளை எதிர்க்கும் சகதிகள் ஒன்று சேரவேண்டுமெனபதில் தி.மு.க.வும் காங்கிரஸும் தெளிவாக இருப்பதாக அவர் சொன்னார்.

அமையவிருக்கும் இந்தக் கூட்டணியில் ம.தி.மு.க. சேர்ததுக் கொள்ளபபடுமா எனக் கேட்டதற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து அந்தக் கட்சி வெளியேறியதைத் தான் வரவேறபதாகவும், மற்ற விடயங்களைப் பின்னர் பேசலாம் என்றும் கூறினார்.

பினனர் செய்தியாளாகளுடன பேசிய தி.மு.க. தலைவர் கருணாநிதி சில நாட்களுக்கு முன் சோனியா காந்தியுடன் பேசிய விஷயம் குறித்தே நாங்கள் இருவரும் பேசினோம் என்று சொன்னார்.

ஜனவரி மாதத்துக்கிடையில் தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி உருவாகுமா என்று கேட்டதற்கு பெப்ரவரி மாதம் முதல் வாரத்துகிடையில் கூட்டணி உருவாக வாய்ப்பு இருக்கிறது என்று கூறினார். (து)



2003–ம் ஆண்டிற்கான “மிஸ் ரஷ்யா” அழகியைத் தேர்ந்தெடுக்கும் போட்டி தலைநகர் மொஸ்கோவில் நடைபெற்றது. இப்போட்டியில் மிஸ் ரஷ்யாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட விக்டோரியா, மகிழ்ச்சிப் புன்னகையுடன் காட்சி தருகிறார்.



இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமுக்கு பூங்கொத்து கொடுத்து புத்தாண்டு வாழ்த்துத் தெரிவிக்கும் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்.

# அ.தி.மு.க.,பா.ஜ.க. கூட்டணி சிந்திக்கவே இல்லை என்கிறார் வெங்கைய நாயுடு

(சென்னை)

மாநிலக் கட்சிகளுடன் தேர்தல் கூட்டணி வைத்துக் கொள்வது பற்றிக் கவனம் செலுத்தவில்லை எனறு பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் வெங்கைய நாயுடு கூறினார். திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களுடன் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டணி வைத்துக் கொள்ளத் தயக்கம் இல்லை என்று கட்சியின் அகில இந்திய செயலாளர் இல கணேசன் கூறியது பற்றிக் கேட்டதற்கு அது பற்றி இன்னமும் சிந்திக்கவே இல்லை என்றார்.

தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொள்ள காங்கிரஸ் கட்சி முயற்சிப்பது பற்றிக் கேட்டதற்கு ‘காங்கிரஸ் ஏதேதோ காரணங்களைக் கூறுகிறது. டில்லிக்கும் சென்னைக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்கள் என்னவாகுமென்று பொறுத்திருந்து பார்ப்போம்’ என வெங்கைய நாயுடு கூறினார். மதச் சார்பின்னை விஷயத்தில் காங்கிரஸ் இரட்டைவேடம் போடுவதாகவும் அவர் காங்கிரஸ்சைக் குற்றஞ் சாட்டினார். (து)

# தொடர்ச்சியாக றம்ஸ் வாத்தியம் இசைத்து இந்தோனேஷியர் சாதனை

(ஜகார்த்தா)

தொடச்சியாக 72 மணித்தியாலயஙகள் றம்ஸ் வாத்தியம் இசைத்து இந்தோனேஷியா ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

குண்டோ ஹடோனா என்ற 26 வயது இளைஞரே தொடர்ந்து 3 நாட்களாக றம்ஸ்வாத்தியத்தை இசைத்து இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்.

டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி ஆரம்பித்து நேற்று முன்தினம் புத்தாண்டோடு இந்தச் சாதனையை அவர் வெற்றி கரமாக நிறைவுசெய்து செய்துள்ளார்.

இதற்கு முன்னதாக பிரிட்டனைச் சேர்ந்த அலிஸ்ரர் பிறவுண் என்பவர் தொடர்ச்சியாக 58 மணி நேரம் றம்ஸ் வாத்தியம் இசைத்து செய்த சாதனையை இவர் முறியடித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. குண்டோ போன்ற சாதனைக் குடி மகனை தமது நாடு பெற்றிருப்பது இநதோனேசியாவுக்குப் பெருமையைத் தருவதாக அந்த நாட்டின் சுற்றுலாததுறை அமைச்சர் ஜியிடே ஆடேஹா தெரிவித்துள்ளார்.

குண்டோவின் பெயரை ‘கின்னஸ்’ உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறச்செய்ய நடவடிக்கைகள் எடுககப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (து-9)

# அமெரிக்க இராணுவ வீரரின் சடலம் ஓமானில் கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்கப் புலன் விசாரணை இராணுவப் பிரிவில் கடமையாற்றிய வீரர் ஒருவரின் சடலம் ஓமானில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தூதரகத்தில இருந்து உலாவச் சென்ற இந்த இராணுவ வீரர் கொல்லப் பட்டிருக்கலாம் என்று அமெரிககத் தூதுவராலயம் தெரிவித்த போதிலும் ஓமான்



உலக தரிசனம்

(வாஷிங்டன்)

அமெரிக்கப் புலன் விசாரணை இராணுவப் பிரிவில் கடமையாற்றிய வீரர் ஒருவரின் சடலம் ஓமானில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தூதரகத்தில இருந்து உலாவச் சென்ற இந்த இராணுவ வீரர் கொல்லப் பட்டிருக்கலாம் என்று அமெரிககத் தூதுவராலயம் தெரிவித்த போதிலும் ஓமான் பொலிஸார் இது தீவிரவாதத் தாக்குதல் அல்லவென ஊர்ஜிதம் செய்துள்ளார்கள்.

டிசம்பர் மாதம் ஜேர்மன் நாட்டில் சுற்றிலாப் பயணம் மேற்கொண்ட ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, விசாரணை செய்வதற்காக வந்த இராணுவ வீரரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

ஆயினும் இதுபற்றி மேலதிக விபரங்களைத் தெரிவிப்பதற்கு தூதுவராலயம் மறுப்புத் தெரிவித்துள்ளதோடு, மத்திய கிழக்கில் நிலவி வருகின்ற தொடர்ச்சியான பதட்ட நிலையில் இது பாரதூரமான செயல் அல்லவென்று கூறியுள்ளார்.(து-9)

# 24 மீனவரையும் விடுவிக்கக் கோரி வாஜ்பாயிடம் பா.ம. கட்சி கோரிக்கை

(புதுடில்லி)

இலங்கை கடற்படையினரால்சிறைப்பிக்கப்பட்டுள்ள, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 24 மீனவர்களை, உடனடியாக விடுவிக்க, இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பாட்டாளி மக்கள் கட்சி பிரதம மந்திரி வாஜ்பாயைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மீனவர்கள் விரைவில் விடுதலையாக வேண்டும் என அவர்களது குடும்பத்தினர் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக பிரதமருக்கு எழுதியுள்ள கடித்தில் பா.ம கட்சித் தலைவர் ஜி.கே. மணி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்பகுதிக்கு அருகாமையில் இந்த மீனவர்கள் மீன் பிடிதது் கொண்டிருந்தபோதே அந்த நாட்டு கடற்படையால் கைதுசெய்யப்பட்டார்கள். (து-9)

# இஸ்ரேல் குடியேற்றம் அமைக்கும் யோசனையை சிரியா நிராகரித்துள்ளது

(டமஸ்கார்)

சிரியாவை அண்டிய பகுதிகளில இஸ்ரேல் குடியேற்றங்களை அமைக்கும் யோசனைகளை சிரியா நிராகரித்துள்ளது.


சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் இஸ்ரேல் தனது எல்லைப் பகுதிகளை பலப்படுத்திக் கொள்ள முயற்சிப்பதாக சிரியா குற்றம் சாட்டியுள்ளது.

1967 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரேபிய - இஸ்ரேல் யுத்தத்தின் போது சிறியாவுக்குச் சொந்தமான கோளான் மேட்டு நிலப் பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது.

அந்தப் பகுதியில் பெருந் தொகையான பணத்தைச் செலவிட்டு புதிய குடியேற்றங்களை அமைக்க தற்போது இஸ்ரேல் விருப்பம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சமாதானப் பேச்சுக்கள் குறித்துப் பேச இஸ்ரேலிய அமைச்சர் ஒருவர் சிரியா செல்லவுள்ளார்.

எனினும் இஸ்ரேலின் குடியேற்றத் திட்ட ஆலோசனையை நிராகரித்த சிரியா தமக்குச் சொந்தமான நிலத்தைப் தமக்கே வழங்கவேண்டும் என்பதே தமது விருப்பம் என அறிவித்துள்ளது. (து-9)



ஈரானில் கடந்த 26ம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கததில் பழமை வாய்ந்த பாம் நகரமே மண்ணோடு மண்ணானது. குவிந்து கிடக்கும் கட்டட இடிபாடுகளுக்கு நடுவே திக்கற்று அமர்ந்திருக்கும் பெண்கள்.

# இன்று ஒரு தகவல்

## ஆசையும் தேவையும்

ஆசைப்படுவதில் தவறில்லை. ஆனால் அந்த ஆசை தேவைக்குத் தகுந்ததாக இருக்கவேண்டும். தேவைக்கு மீறிய ஆசைகள் தேவையில்லை. இந்தக் கருத்தை வலியுறுத்தும் கதை ஒன்று உண்டு.

தேவேந்திரனுக்குத் திடீரென்று வீடு கட்டவேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. வீடென்றால் நாம் கட்டுவது போல் இல்லை. தேவேந்திரனின் வீடென்றால் சும்மாவா? ஒரு பிரம்மாண்டமான அரண்மனை கட்டவேண்டும். அது போல் இந்த மூன்று லோகத்திலும் ஒரு அரண்மனை கிடையாது என்று எல்லோரும் கூறவேண்டும் இது அவனது ஆசை.

உடனே தேவதச்சரான விஸ்வகர்மாவை அழைத்து உத்தரவிட்டான். விஸ்வகர்மா தனது உதவியாளர்களை கூப்பிட்டு ஒன்றாகச் சேர்த்தார். படாதபாடுபட்டு ஒரு பெரிய அரண்மனை கட்டினார். அதைக் கட்டிமுடிக்க ஆயிரம் வருடங்கள் ஆகிவிட்டன.

தேவேந்திரன் வந்து பார்த்தான் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. "என்னுடைய அந்தஸ்துக்கு இது மிகச் சாதாரணமான கட்டிடம். இதைவிடப் பெரிதாகக்கட்டு" என்றான். தேவதச்சர் திணறிப்போய் விட்டார். அவரால் அதற்குமேல் எதுவும் செய்ய முடியவில்லை. என்ன செய்வதென்று யோசித்தார். நேராகச் சென்று நாரதர் காலில் போய் விழுந்தார். "நீங்கள் தான் இந்தப் பிரச்சினையில் இருந்து என்னைக். காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

நாரதர் யோசித்தார் "கவலைப்படாதே" என்று கூறிவிட்டு இந்திரனிடம் சென்றார். இந்திரன் நாரதரைப் பார்த்தவுடன் வாருங்கள் என்று கூட்டிக்கொண்டு போய் அரண்மனையைக் காட்டினான் . "இது போன்று ஓர் அரண்மனையை வேறு எங்காவது பார்த்திருக்கின்றீர்களா?" என்று பெருமையாகக் கேட்டான்.

"நான் பார்த்ததில்லை ஆனால் என்னைவிட வயதில் மூத்தவர் மகரிஷி லோமேஷர்! அவர் ஒரு வேலை பார்த்தாரோ என்னவோ?" என்றார். உடனே அவரை மனதில் நினைத்து தியானம் செய்தார். அடுத்த கணம் லோமேஷர் அங்கே தோன்றினார். இடையில் ஒரு சிறு துண்டு கையில் ஒரு கமண்டலம். தலையில் ஒரு பாய் அவ்வளவுதான் அவரிடம் இருந்தது.

"எதற்காக இந்தப் பாய்?" என்று கேட்டான் இந்திரன். என் போன்ற அற்ப ஆயுள் உள்ள ஒரு ஜீவன் தனியாக வீடு கட்டிக்கொண்டு திண்டாடவேண்டுமா? இந்தப் பாய் தான் என் வீடு மாதிரி எனக்கு நிழல் தருகின்றது என்றார் அவர். "என்ன! உங்களுக்கு அவ்வளவு குறைவான ஆயுளா?" என்று ஆச்சரியமாகக் கேட்டான் இந்திரன். "ஆமாம்! இதோ பார் என் மார்பில் ஒரு பொற்காசளவிற்கு உரோமம் உதிர்ந்து விட்டது. எனது உடலில் உள்ள எல்லா உரோமங்களும் உதிருமோ அப்போது எனது ஆயுள் முடியும்" என்றார் அவர்.

எப்போது அந்த உரோமங்கள் முழுதும் உதிரும்? என்று கேட்டான். "ஒரு பிரம்மா மறைந்ததும் ஒரு உரோமம் உதிரும். என் உடலில் உள்ள உரோமங்களின் எண்ணிக்கை எவ்வளவோ அவ்வளவு பிரம்மாக்கள் தோன்றி அவர்களது ஆயுள் முடியும் போது என் உடலில் உள்ள எல்லா உரோமங்களும் உதிரும்" என்றார்.

"அப்படியென்றால் ஒரு பிரம்மாவின் ஆயுட்காலம் எவ்வளவு?" என்று கேட்டான். "ஒரு பிரம்மா 100 தேவ வருஷம். ஒவ்வொரு தேவ வருஷத்திற்கும் 365 தேவ நாள். ஒவ்வொரு தேவநாளிலும் உன்போன்று 14 இந்திரர்கள் தோன்றி மறைகின்றனர்" என மகரிஷி லோமேஷர் கூறினார்.

இதைக்கேட்ட இந்திரன் ஆடிப்போய் விட்டான். "அவ்வளவு ஆயுள் உள்ள இவரே அற்ப ஆயுள் என்கிறார். நான் எனது ஆயுளைப் பெரிதாக நினைத்துக் கொண்டு பிரம்மாண்ட அரண்மனை கட்டவேண்டும் என்று ஆசைப்படுகிறேனே!" என்று நினைத்தான். எனக்கு வீடுகட்டிய வரை போதும் என்று விட்டான்.

அதனால நாம் நமது தேவைக்குத் தகுந்தது போன்று ஆசைப்படுவதுதான் நியாயம். ஆனால் அப்படியா நடந்து கொள்கிறோம். மனித கடவுளை ஏமாற்றிக் காசு வாங்க ஆசைப்படுகிறான்.

ஒருவன் கடவுளை நினைத்துத் தவமிருந்தான். கடவுள் நேரில் வந்தார். "தேவலோகத்தில் ரூபாயின் மதிப்பு என்ன?" என்று இவன் கேட்டான். "அங்கு ரூபா என்பது உங்கள் காசில் ஒரு கோடி ரூபாவுக்குச் சமம். அதேபோல் எமக்கு ஒருநாள் என்பது உங்கள் கணக்கில் ஒரு கோடி வருடங்களுக்குச் சமம்" என்றார் கடவுள்.

"அப்படியென்றால் நீங்கள் எனக்கு அதிகமாக எதுவும் தரவேண்டாம். உங்கள் கணக்குப்படி ஒரு ரூபாய் கொடுங்கள் அது போதும்" என்றான் இவன். கடவுள் யோசித்தார். "அது ஒன்றும் சிரமமில்லை. ஒரு ரூபா கொடுத்து விடுகிறேன். ஆனால் இப்போது நான் பணம் எடுத்துக்கொண்டு வரவில்லை. அதனால் எங்கள் கணக்குப்படி ஒருநாள் பொறுத்துக்கொள் பணத்துடன் வருகிறேன்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பெருமளவு விடுதலைப் புலிகள் கொழும்பில் ஊடுருவியுள்ளனர்

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கொழும்பில் பெருமளவு விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளார்கள்.

இதற்கு முன்னாள் பாதுகாப்பு அமைச்சரின் பொறுப்பற்ற தனமான செயற்பாடுகளே காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

அண்மையில் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ள ஜனாதிபதி மேலும் கூறுகையில்,

திருகோணமலை, மன்னார், அம்பாறை மாவட்டங்களின் பாதுகாப்பு நிலைவரம் மிகவும் மோசமாகவுள்ளது. திருகோணமலை கடற்படைத்தளத்தை ஒரேநாளில் கைப்பற்ற விடுதலைப்புலிகள் திட்டம் போட்டிருந்தனர். இதைப்பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு பல தடவைகள் நான் கூறியும் அவர்கள் கேட்கவில்லை. திருகோண மலையில் இதனால் பாரிய விளைவுகள் ஏற்படும் என எச்சரித்திருந்தும் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டார். இதனாலேயே பாதுகாப்பு அமைச்சை நான் பொறுப்பேற்க வேண்டி ஏற்பட்டது.

நான் பொறுப்புணர்வுடன் செயற்படுவதை மக்கள் விரும்புகின்றனர். இரண்டாவது தடவையாகவும் நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு இதுவே காரணம்.



அரசியல் யாப்பின்படி, பிரதமருக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் அதிகாரம் அளிக்கும் உரிமை ஜனாதிபதிக்கு மட்டுமே உண்டு என்று சுட்டிக்காட்டியுள்ளார். (உ-[illegible])

# நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட அமெரிக்காவுக்கு அதிகாரம் கிடையாது

## மக்கள் விடுதலை முன்னணி கண்டனம்

(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட்டு நாட்டின பிரச்சினைகளுக்குத் துரிதமாகத் தீர்வுகாணும்படி வற்புறுத்தும் அதிகாரம் எதுவும் அமெரிக்காவுக்குக் கிடையாது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அண்மையில் வாஷிங்டனில் வைத்து அமைச்சர் மிலிந்த மொறகொட, அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சட் ஆர்மிடேஜைச் சந்தித்து நடாததிய பேச்சுவார்த்தைகளின் போது, றிச்சட் ஆர்மிடேஜ் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி மிகுந்த அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இது விடயம் குறித்து மக்கள் விடுதலை முன்னணி மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையின் அரசியலிலும், உள்நாட்டு விவகாரங்களிலும் தற்போது ஏற்பட்டுள்ள ஸ்தம்பித நிலையை இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாதென றிச்சட் ஆர்மிடேஜ் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கான எந்தவொரு அதிகாரமும் அமெரிக்காவுக்குக் கிடையாது. எமது நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா வீணாகத் தலையிட்டு வருகின்றது.

அமெரிக்கா மூலமாக எமது நாட்டு மக்களை அரசாங்கம் அச்சுறுத்தி வருகின்றது. அமெரிக்காவின் அனுசரணையுடன், அதிகாரத்தனமான ஆட்சியைத் தொடர்ந்தும் நடாத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்தித்த போது, றிச்சட் ஆர்மிடேஜ் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக "த ஐலண்ட்" பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடுவதற்கு அமெரிக்காவுக்கு எத்தகைய தார்மீக உரிமைகளும் கிடையாது என கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-18,60)

## இராசி பலன்

**03. 01. 2004**

**(மார்கழி 19, சனிக்கிழமை)**

| | |
|---|---|
| ஏகாதசி | பி.ப.1.54 மணி வரை |
| பரணி | காலை 06.41 மணிவரை |
| கார்த்திகை | காலை 6.42 தொடக்கம் |
| இராகுகாலம் | 09.30-11.00 மணிவரை |
| சுபநேரம் | 3.30-05.00மணிவரை |

சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்

**மேடம்**
அதிக வார்த்தை, பூர்வ புண்ணியகருமம், தொழில் கஷ்டம், முயற்சி தாமதம்.

**இடபம்**
தெய்வ சிந்தை, புதிய பொருள் சேர்க்கை, விருந்துபசாரம், நல்ல முயற்சி.

**மிதுனம்**
பிரயாணம், அமைதிக்குறைவு, ரோக நிலை, பணவிரயம்.

**கடகம்**
காரிய நன்மை, வாக்கு மேன்மை, குடும்பத்தில் மகிழ்ச்சி, தெய்வ தரிசனம்.

**சிங்கம்**
தொழிலில் ஆர்வம், விருந்துபசாரம், பாராட்டப்படுதல், முயற்சி கைகூடும்.

**கன்னி**
சரீரப்பிரயாசை, நோய் குணமடைதல், எடுத்த காரியம் கைகூடும், கட்டுப்பாடு.

**துலாம்**
சகோதரர் உதவி, எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தடங்கல், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
கலந்துரையாடல், அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், போசன சுகம்.

**தனுசு**
பெரியோர் சந்திப்பு, எடுத்தகாரியம் கைகூடும், சிந்தனை மிகுதி, புதிய வி[illegible].

**மகரம்**
குடும்பக் கவலை, முயற்சி தாமதம், நித்திரைக் குறைவு, கௌரவக்குறைவு.

**கும்பம்**
தாய்வழி உறவு, ரோக நிலை, வேலைப்பளு அதிகம், திடீர் நன்மை.

**மீனம்**
நண்பர்கள் உதவி, தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, போசன நன்மை.

(பழைய [illegible] கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# இயற்கை அனர்த்த பாதிப்புக்கு இழப்பீடு

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வாண்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 42 குடும்பங்களுக்கு இழப்பீடாக 2 இலட்சத்து 24 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

சமூக சேவை நலன்புரி அமைச்சினால் வழங்கப்பட்ட இந்த நிதி யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதி அதிகாரிகளால் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து அண்மையில் உரியவர்களுக்கு வழங்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் வே. சாம்பசிவம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிராம அலுவலர்கள், யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதி அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர். (உ-246)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் நண்பகல் வரை திருவாசக முற்றோதல் இடம் பெறவுள்ளது. (உ-7)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

3

## அறிமுகம்

இரண்டாம், மூன்றாம் ஆவணங்களின் வாசகங்களிடையே எந்த விதமான வேறுபாடுகளும் காணப்படவில்லை. ஆதலினாலே அவற்றுள் ஒன்றை மட்டுமே இங்கு வெளியிடுகின்றோம். அவையிரண்டின் சுவடிகளும் கையெழுத்துப் பிரதிகளாய் உள்ளன. எழுத்துகள் வித்தியாசமானவை, எழுதியவர்களும் வேறிருவர் என்பதில் ஐயமில்லை. ஒருவர் எழுதியதை இன்னொருவர் பார்த்து எழுதியுள்ளார் என்பதிலும் எதுவித சந்தேகமுமில்லை. வழமைகள் பொதுவானவை எனினும் அவர்கள் தனித்தனியாக எழுதியிருப்பின் அறிக்கைகளின் வாசகங்களில் வேறுபாடுகளை எதிர்பார்க்கலாம். ஆனால் இந்த ஆவணங்கள் இரண்டும் சொல்லுக்குச் சொல்லும், வரிக்கு வரியும் ஒரே விதமாகவே அமைந்து காணப்படுகின்றன. இந்த ஆவணங்கள் இரண்டிலும்

1) உரிமையும் சீதன வகையும்
2) காணிபூமி தோட்டம் முதலானது ஆட்சி படுகிற விதங்கள்
3) நன்கொடை வகை
4) காணி ஒற்றியின் வகை
5) கூலிக்குப் பிடிக்கிற வகை
6) கொள்வனவு விற்பனவு
7) ஆண்சிறை பெண்சிறைகளின் வகை
8) வட்டிக்குப் பணம் கொடுக்கிற வகை

என்னும் தலைப்புகளின் கீழே வழமைகள் விளக்கப்பட்டுள்ளன. அவ் விபரங்கள் மிகச் சுருக்கமானவை. அவற்றை நோக்குமிடத்துப் புத்தளத்து வெள்ளாளரினதும் கற்பிட்டியில் வாழ்ந்த செட்டிகள், வெள்ளாளர், கம்மாளர், வண்ணார் முதலிய சாதியாரினதும் வழமைகள் பொதுவானவை எனபது புலபபடும. அநதப பிராநதியததிலுளள பல சாதியாருககும பொதுவான வழமைகளை அங்கு முற்காலங்களிலே வாழ்ந்தவர்கள் தேசவழமை என்று சொன்னார்கள். வேறு சில சாதியார் அவற்றிலிருந்தும் வேறான வழமைகளைப் பின்பற்றினார்கள். அந்த வழமைகள் சாதிவழமைகள் என்னும் வகைக்குரியவை. புத்தளத்து முக்குவர், கற்பிட்டியில் வாழ்ந்த பரதவர் ஆகியோரின் சாதி வழமைகளைச் சுருக்கமாக விபரிக்கும் ஆவணங்கள் உள்ளன.

முக்குவரின் சாதிவழமை என்னும் ஆவணத்தில் முக்குவரின் வழமைகள் மேல்வரும் எட்டுப் பிரிவுகளிலே மிகச் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன.

1) உரிமையின் வகை
2) சீதனம் கொடுக்கிற வகை
3) காணிபூமி, தோட்டம் முதலானதுகள் ஆட்சிப்படும் விதங்கள்
4) நன்கொடை வகை
5) காணி ஒற்றிப் பிடிக்கிற வகை
6) ஆண்சிறை பெண்சிறைகளின் வகை
7) வட்டிக்குப் பணம் கொடுக்கிற வகை
8) கொள்வனவு விற்பனவு வகை

இவற்றுள் முதலாவது பிரிவிலுள்ள விதிகளே தேவழமை. பரதவர் சாதி வழமை போன்றவற்றிலிருந்து வேறுபடுகின்றன. அந்த வேற்றுமைகளும் ஆதனவகைகளைப் பற்றியனவாக அமைநதிருககவிலலை. முதுசொம, சதனம, தேடடம எனனும சொதது வகைகள தேசவழமை, முக்குவர் சாதிவழமை ஆகிய இரண்டுக்கும் பொதுவானவை. அவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் உரிமைகள் பற்றியனவாகும். முக்குவரின் உரிமை முறை மருமக்கள் தாய முறையினைப் போன்றதாகும். அது உரிமையின் வகை என்னுந் தலைப்பிலே எழுதப்பட்டுள்ளனவற்றாற் புலனாகின்றது. முக்குவரின் சாதி வழமையில் உரிமையின் வகை பற்றி மேல்வருமாறு சொல்லப்படுகின்றது.

"ஒரு தலைமைக்காரனுக்கு இராசாக்களாலே கிடைத்திருக்கிற உறுதி ஒப்பிதங்களும் முதுசொம்மான ஊர் காணி உடமைகளும் அந்தத் தலைமைக்காரனுடைய பிற்காலம் அவன் சகோதரர்களுக்கும் மருமக்களுக்கும் அவன் தாய்வழிச் சனத்துக்கும் சேரும். அவன் தானாகத் தேடப்பட்ட சொம்கள் அவன் பெற்ற பிள்ளைகளுக்குச் சேரும். அவன் சீதனம் பெற்ற சொம்கள் இருந்தால் அவன் பிள்ளைகளுக்குச் சேரும். அவன் பிளளைகள் இல்லாமல இருந்தால் அவன் முதுசொம்மாகக் கொண்டுவரப்பட்ட சொம்கள் அவன் சகோதரத்துக்கும் மரு[illegible]

## "சுவர்க்க வாசல்"

## ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி

ஸ்ரீ திருக்குறுங்குடி நம்பி ஸ்ரீமன் நாராயணனின் திரு அவதாரமாகிய ஸ்ரீ நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவாய் மொழியின் பத்தாம் பத்துவில் 9ஆம் பதிகத்தில் "வைகுண்ட ஏகாதசியின் சிறப்பியல்புகளை "அர்ச்சிராதி மார்க்கம்" நேரில் திருக்குருகூர் திருப்புளிய மரத்தின் கீழ் அமர்ந்து, ஸ்ரீமன் நாராயண மூர்த்தி திருப்பாற் கடலினின்று அறிதுயில் விழித்து திருவைகுண்டம் ஏகாதசி நாளில் புகுந்த வைபவத்தைக் கண்டு கொண்ட அற்புத காட்சிகளை அருளிச் செய்திருக்கின்றார்.

இந்த அற்புதக் காட்சியை எல்லோரும் பாடிப் பணிபுரியும் வண்ணமும் ஸ்ரீமன் நாராயணனோடு வைகுந்தத்தில் இருக்கும் பேறு உடையவர்களாக விளங்குவார்கள். பாசுரங்கள் பின்வருமாறு:-

**திருவாய்மொழி பத்தாம் பத்து 9ஆம் சூழ்விசும்பு - பதிகம்**
**திருப்பாற்கடலில் நிலைப்பேறுகள்**

*இராகம் :– கல்யாணி*

1.சூழ்விசும் பணிமுகில் தூரியம் முழங்கின
ஆழ்கட லலைதிரை கையெடுத் தாடின
ஏழ்பொழிலும் வளமேந்திய என்னப்பன்
வாழ்புகழ் நாராயணன் தமரைக் கண்டுகந்தே.

**நிறைகுடங்களும் தோரண நிரைகளும்**

2.நாராயணன் தமரைக் கண்டுகந்து நன்னீர்முகில்
பூரண பொற்குடம் பூரித்ததுயர் விண்ணில்
நீரணி கடல்கள் நின்றார்த்தன நெடுவரைத்
தோரணம் நிரைத் தெங்கும் தொழுதனருலகே

**அறிதுயிலிருந்து எழுப்புதலும்**
**வைகுந்தம் செல்வதற்கு வழியும்**

3.தொழுதன ருலகர்கள் தூபநல் மலர்மழை
பொழிவனர் பூமியன் றளந்தவன் தமர்முன்னே
எழுமினென்று இருமருங் கிசைத்தனர் முனிவர்கள்
வழியிது வைகுந்தற்கென்று வந்தெதிரே

**தேவர்கள் வைகுந்தத்தில் இருப்பிடம் அமைத்தல்**

4.எதிரெதி ரிமையவர்(கள்) இருப்பிடம் வகுத்தனர்
கதிரவரவரர் கைநிரை காட்டினார்
அதிர்குரல் முரசங்களலைகடல் முழக்கொத்த
மதுவிரிதுழாய்முடி மாதவன் தமர்க்கே

**ஸ்ரீமன் நாராயணன் வைகுந்தம் புகுவதற்கு**
**வேதங்களும் ஓத கீதங்களும் வேள்வியும்**
**நடைபெற்றன**

5.மாதவன் தமரென்று வாசலில் வானவர்
போதுகமினெமதிடம் புகுதுக வென்றலும்
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்ககள்
வேதநல்வாயர் வேள்வியுள் மடுத்தே

**ஓமகுண்ட யாகங்கள் நறும் புகைகள் எங்கும் நிரம்ப**
**வலம்புரி சங்குநாதங்களும் இசைத்தன மடந்தையர்**
**வாழ்த்துதலும்**

6.வேள்வியுள் மடுத்தலும் விரைகமழ் நறும்புகை
காளங்கள் வலம்புரி கலந்தெங்கும் இசைத்தனர்
ஆழ்மின்கள் வானகம் ஆழியான் தமரென்று
வாளொண்கண் மடந்தையார் வாழ்த்தினர் மகிழ்ந்தே

**மடந்தையர் வாழ்த்தலும் தோத்திரம் சொல்லுதலும்**
**ஸ்ரீநாராயணனின் பிரகாசம் பொருந்திய**
**மணி முடிவைத்தலும்**

7.மடந்தயர் வாழ்த்தலும் மருதரும் வசுக்களும்
தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர் தொடுகடல்
கிடந்த வெங்கேசவன் கிளரொளி மணிமுடி
குடைந்தை யெங்கோவலன் குடியடி யார்க்கே

**ஸ்ரீமன் நாராயணன் வைகுந்தம் புகுவதற்கு முடியுள்**
**தேவர்கள் எதிர்கொண்டு நெடுமதில் புடைய**
**கோபுரம் வாசலுக்கு அழைத்தனர்**

8.குடியடி யாரிவர் கோவிந்தன் தமதென்று
முடியுடை வானவர் முறைமுறை யெதிர்கொள்ள
கொடியணி நெடுமதில் கோபுரம் குறுகினர்
வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே

**ஸ்ரீமன் நாராயணன் வைகுந்தம் புகும்நேரம்**
**முனிவர்கள் தேவர்கள் வியப்பு எய்தினர் மண்ணில்**
**சீலர்களுக்கு முதல் வழி வைகுந்தமே**

9.[illegible]

"ஒரு தலைமைக்காரனுக்கு இராசாக்களாலே கிடைத்திருக்கிற உறுதி ஒப்பிதங்களும் முதுசொம்மான ஊர் காணி உடமைகளும் அந்தத் தலைமைக்காரனுடைய பிற்காலம் அவன் சகோதரர்களுக்கும் மருமக்களுக்கும் அவன் தாய்வழிச் சனத்துக்கும் சேரும். அவன் தானாகத் தேடப்பட்ட சொம்கள் அவன் பெற்ற பிள்ளைகளுக்குச் சேரும். அவன் சீதனம் பெற்ற சொம்கள் இருந்தால் அவன் பிள்ளைகளுக்குச் சேரும். அவன் பிளளைகள் இல்லாமல இருந்தால் அவன் முதுசொம்மாகக் கொண்டுவரப்பட்ட சொம்கள் அவன் சகோதரத்துக்கும் மருமககளுககும சேரும. அவன பெறறிருநத சதனமான சொமகள அவன பெணசாதி வழிச சனததுககுச சேரும. அவன தேடபபடட சொமகள இருநதால அவன வழிசசனமும அவன பெணசாதி வழிச் சனமும் சரி பங்காகப் பிரிந்து எடுத்துக் கொள்கிறது"

முக்குவரைப் பொறுத்தவரையிற் சந்தான வழி உரிமையான பதவிகள், பட்டங்கள் முதலானவையும் சொத்துடைமைகளும் ஒருவனுக்குப் பின், அவனுடைய மக்களுக்கன்றிச் சகோதரியின் பிள்ளைகளான மருமக்களுக்கே உரியனவாகும். இந்த முறையானது மலையாள முக்குவ ரின் வழமை என்பது இங்கு கவனித்தற்குரியது. மட்டக்களப்பிலும் புத்தளத்திலும் வாழ்ந்த முககுவரின் சொத்துரிமைகள் எல்லாந் தாய்வழி உரிமையானவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (தொடரும்)

---

## அருஞ்சொல் விளக்கம்

இந்நூலில் இடம்பெறும் சொற்களிற் சில இலகுவிற் புரிந்து கொள்ள முடியாதவை. அவற்றுட் சில பொதுவழக்கில் உள்ளவை. வேறு சில பிரதேச மொழி வழக்கில் உள்ளவை. சில சொறகள வழககொழிநது விடடன. மாதாககள, மூதாககள; தாலிததியம போனற சொறகள இந் நாட்களிலே பேச்சுவழக்கில் எங்காவதும் காணப்படுவதில்லை. அவை அகராதிகள், நிகண்டுகள் ஆகியவற்றிலும் காணப்படுவதில்லை. ஆனால், முற்காலங்களில் அவை பேச்சுவழக்கில் இடம்பெற்றிருந்தன. வாழ்க்கை முறையிலும் சமூக வழமைகளிலும் ஏற்பட்டுள்ள பெருமாற்றங்களினாலும் அவற்றின் உபயோகம் மொழிவழக்கில் அரிதாகி விட்டமையாலும் பொதுவழக்கிலிருந்த வேறும் பல சொற்கள் எல்லோராலும் இலகுவிற் புரிந்துகொள்ள முடியாதனவாகும். எனவே அத்தகைய சொற்களைத் தெரிந்து, வரிசைப்படுத்தி, அவற்றின் பொருளை இங்கு விளக்கியுள்ளோம்.

சில சொற்களின் விளக்கங்களைப் பொறுத்தவரையில் அவை அகராதிகளிலுள்ள விளக்கங்களிலிருந்து வேறுபடக்கூடும். அகராதிகளைப் பொறுத்தவரையிலே சென்னைத் தமிழ்ப் பேரகராதியினையே துணையாகக் கொண்டு சொற்களின் பொருளைத் தெளிவுபடுத்தியுள்ளோம். சமுதாய வழமைகள், பண்பாட்டு மரபுகள், மொழிவழக்கு ஆகிய எல்லா அம்சங்களையும் கருத்திற் கொண்டே இங்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ள சொற்கள் விளக்கப்பட்டுள்ளன.

மடடககளபபுப பிரதேசதது மொழி வழககிற மடடுந தனியாகவுளள சொறகளின அருகிலே 'ம' எனற எழுததும, புததளம கறபிடடி பிரதேசததில மடடும வழஙகிய சொறகளின அருகிலே 'பு' என்ற எழுத்தும், முஸ்லிம்க்ளின் மொழி வழக்கில் மட்டும் காணப்படும் சொற்களின் அருகிலே 'மு' எனற எழுததும அடைபபுககுறிகளில இடபபடடுளளன. (தொடரும)

முடியுடை வானவர் முறைமுறை யெதிர்கொள்ள
கொடியணி நெடுமதில் கோபுரம் குறுகினர்
வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே

**ஸ்ரீமன் நாராயணன் வைகுந்தம் புகும்நேரம் முனிவர்கள் தேவர்கள் வியப்பு எய்தினர் மண்ணில் சீலர்களுக்கு முதல் வழி வைகுந்தமே**

9.வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர்
வைகுந்தன தமரெம ரெமதிடம் புகுதென்று
வைகுந்தத் தருமம் முனிவரும் வியந்தனர்
வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே

**ஸ்ரீமன் நாராயணனின் பாதங்களை நல்வேதியர்கள் கழுவினார்கள் வைகுந்தம் புகுந்த பின் நிதியும் நற் சுண்ணமும் மதிமுக மடந்தையர் நிறைகுட விளக்கும் எடுத்தார்கள்**

10.விதிவகை புகுந்தன ரென்று நல்வேதியர்
பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்
நிதியும் நற்சுண்ணமும் நிறைகுட விளக்கமும்
மதிமுக மடந்தையர் ரேந்தினர் வந்தே

**ஸ்ரீமன் நாராயணன் வைகுண்டத்தில் உள்ள மா மண்டபத்தில் இருந்து அடியார்களுக்கு அருள் பாலித்தல்**

11.வந்தவரெதிர் கொள்ள மாமணி மண்டபத்து
அந்தமில் பேரின்பத் தடியரோ டிருந்தமை
கொத்தலர் பொழில்குரு கூர்க்சடகோபன் சொல்
சந்தங்க ளாயிரத்திவை வல்லார் முனிவரே

**சாற்றுக்கவி**

12.சூழ்ந்து நின்றமால் விசும்பில் தொல்லைவழிகாட்ட
ஆழ்ந்த தனைமுற்றும் அனுபவித்து - வாழ்ந்தங்கு
அடியருடனே யிருந்தவாற்றை உரைசெய்தான்
முடிமகிழ் சேர்ஞான முனி.

ஸ்ரீமன் நாராயணன் வைகுந்தத்தில் மா மணிமண்டபத்தில் இருந்து அடியார்களுக்கு அருள் ஆசி வழங்கின காட்சியை ஸ்ரீ நம்மாழ்வார் அக மகிழ இப்பாசுரமான "வைகுண்ட ஏகாதசி" திருவாய் மொழியில் அருளிச் செய்திருக்கிறார். இப்பேற்றினை ஸ்ரீநம்மாழ்வார் அனுபவித்தனை நாமும் அனுபவிக்கவேண்டும் என ஸ்ரீமன் நாராயணனுக்கே இப் பதிகத்தை பாடிமகிழ்வோம்.

***தொகுத்தவர் :-*** திருமால் அடிமை, திவ்வியப்பிரபந்த ஆய்வாளரும், திருவாய்மொழி உபாசகருமான திருவாசகமணி க.மாணிக்கவாசகர் அவர்களால் தொகுக்கப்பட்டது.

(8068)

# முற்றுப்பெறாத முடிவுகளோடு முடிந்துபோன 2003

## வலம்புரி நினைவுக்குறிப்பு


## பெப்ரவரி

**02.02.2003**
- ★ அதி உயர் பாதுகாப்பு வலயம் குறித்து பொதுமக்கள் கருத்தறிய சதீஸ் நம்பியார் வருகை.
- ★ ம.லிந்த ராஜபக்ஷ இந்தியாவில் குஜ்ரால், வாஜ்பாய் ஆகியோருடன் சந்திப்பு.
- ★ மதமாற்றத் தடைச்சட்ட விவகாரம் குறித்து மகேஸ்வரனுக்கு எதிராக முகத்துவாரத்தில் ஆர்ப்பாட்டம்.

**03.02.2003**
- ★ முன்னாள் தளபதி சதீஸ் நம்பியார் வடக்கு விஜயம், மிலிந்தவுடன் சந்திப்பு, யாழ். குடாநாட்டு நிலை குறித்து சரத்பொன்சேகா ஆகியோருடன் சந்திப்பு.



★ விடுதலைப் புலிகளின் முக்கிய பி.,திநிதிகள் அடங்கிய குழு 5 ம் சுற்றுப் பேச்சுக்காக பேர்ளின் பயணம். கருணா, சு.ப.தமிழ்ச்செல்வன்.



**05.02.2003**
- ★ பிரதமர் தலைமையில் கொழும்பு ஒப்ரோஸ் ஹோட்டலில் சார்க் மாநாடு ஆரம்பம்.



- ★ பிரதமர் ரணில், ரவூப் ஹக்கீம், பிரி. வெளிநாட்டமைச்சர், கினெம்சுட்டி, மிலிநத மொறகெ.ட சந்திப்பு. 5 ஆம் கட்டப் பேச்சுக்கள் குறித்து.

**07.02.2003**
- ★ 5 ஆம் கட்டப் பேச்சுவார்த்தை பேர்ளினில் ஆரம்பம்.



★ நெடுந்தீவில் புலிகளின் படகு ஒ.ைறை கடற்படையினர் முற்றுகை இட்டனர். கடற்புலிகள் தமது படகைத் தீமூட்டனர். 3 கடற்புலிகள் உயிரிழப்பு.

**10.02.2003**
- ★ அமைச்சர் ஜெயலத் யாழ். விஜயம்.



**12.02.2003**
- ★ இடுப்புப்பட்டி அணிந்துவந்த பெண் போராளிகளை இராணுவம் தாக்கிய சம்பவம் மானிப்பாயில்.

**13.02.2003**
- ★ மிருசுவில் படுகொலை விசாரணை.
- ★ மானிப்பாயில் சம்பவத்தைக் கண்டித்து பொது அமைப்புகள் க.கா. குழுவிடம் மகஜர் கையளிப்பு.
- ★ ஜேர்மனிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிப் பிரதிநிதிகள் வன்னி வருகை.
- ★ கூட்டமைப்பு எம்.பிக்கள் யசூசி அகாசியைச் சந்தித்து நடைமுறைப் பிரச்சினை பற்றி ஆராய்ந்தனர்.

**14.02.2003**
- ★ யாழ். நூலகத் திறப்புவிழாவை எதிர்த்துக் கிளம்பிய சர்ச்சைகளால் மாநகர முதல்வர் உட்பட உறுப்பினர்கள் யாவரும் ராஜினாமா.
- ★ மானிப்பாய் தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம். ஜனாதிபதி, யாழ். தளபதி ஆகியோரின் கொடும்பாவி எரிப்பு.

**16.02.2003**
- ★ பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிவதற்குத் தடை விதிப்பு.

**18.02.2003**
- ★ பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றில் இடம்பெற்றது. 4 வாக்குகளால் தோல்வி.
- ★ ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் சந்திப்பு

**19.02.2003**
- ★ கந்தரோடையில் புத்தவிகாரை அமைப்பது குறித்து வலி. வடக்கு. தெற்கில் கண்டனப் பேரணி.
- ★ யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெறுவது குறித்து யாழ். குடாநாட்டில் கறுப்புப் பட்டிப் போராட்டம்.
- ★ மானிப்பாய் சம்பவத்தைக் கண்டித்து மட்டக்களப்பு - அம்பாறையில் பூரண ஹர்த்தால்.

**20.02.2003**
- ★ தேசிய விளையாட்டுவிழா கிளிநொச்சி மத்திய மைதானத்தில் ஆரம்பம்.



# முற்றுப்பெறாத முடிவுகளோடு முடிந்துபோன 2003

## வலம்புரி நினைவுக்குறிப்பு

### பெப்ரவரி

22.02.2003 ★ சமாதான உடன்படிக்கையின் ஓராண்டு நிறைவு.




23.02.2003 ★ மிலிந்த மொறகொட நெடுந்தீவு விஜயம்


24.02.2003 ★ சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் நல்லை ஆதீனத்தில் சர்வ மதப் பிரார்த்தனை.




25.02.2003 ★ சமாதானப் பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றுவது

## உலக அரங்கில்

02.01.2003 ★ விண்வெளியிலிருந்து கிளம்பிய கொலம்பிய ஓடம வெடித்துச் சிதறியது.




09.02.2003 ★ உலகக்கிண்ண கிரிக்கெற் போட்டி தென்னாபிரிக்காவில் ஆரம்பம்.



25.02.2003 ★ சமாதானப் பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றுவது குறித்து 17 முஸ்லிம் எம்.பிக்கள் பிரதமருடன் சந்திப்பு

26.02.2003 ★ இந்தியப் பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு
★ பிரதமர் இந்தியா பயணம். இந்தியா ருடே கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக.

28.02.2003 ★ பிரதமீர் வாஜ்பாய் - ரணில் சந்திப்பு.





12.02.2003 ★ இந்திய - ரஷ்ய கூட்டுத் தயாரிப்பான ஏவுகணை வெற்றிகர சோதனை.



20.02.2003 ★ ஈரானிய இராணுவ விமானம் தென் கிழக்குப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியதில் 302 படையினரும் 18 விமானச் சிப்பந்திகளும் மரணம்.

தொடரும்

# ஈழத்துப் பெண்களைப் பின் பற்றுவதில் ஐரோப்பியர் ஆர்வம்காட்டி வருகின்றனர்

## உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளிலே வசிக்கின்ற ஈழத்து சைவப் பெண்களின் நடை, உடை பாவனைகளில் நாட்டம் கொண்டுள்ள ஆங்கிலேயப் பெண்கள் அவர்களைப் போன்று தாமும் மாறுவதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இதற்குக் காரணம் ஈழத்துப் பண்பாட்டின் தனித்துவமே என்றால் மிகையன்று.

சுவிடன் நாட்டு உப்சாலாசப் பல்கலைக்கழக சமய வரலாற்றுப் பேராசிரியர் கலாநிதி பற்றூர் ஷால்க், ஐரோப்பிய நாடுகளில் இலங்கைச் சைவர்கள் எதிர்நோக்கும் சமய, சமூகப்பிரச்சினைகள் என்ற தலைபபில் நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆற்றிய விசேட விரிவுரையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் உரையாற்றுகையில், ஆலயங்கள் கட்டுவதில் வெளிநாடுகளில் வசிக்கும் ஈழத்துச் சைவர்கள் ஆர்வம் மிகுந்தவர்களாகவுள்ளனர்.சைவ சித்தாந்த முறைப்படி ஆலயங்களை அங்கு அமைத்து வழிபாடியற்றுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.


இந்த வழிபாட்டு முறைகள் ஐரோப்பியர்கள் அநேகரைக் கவர்ந்திருக்கின்றன.

சைவர்களின் ஒற்றுமை, ஒழுக்கம் என்பவற்றை அவர்கள் வியந்து போற்றுகின்றர் எனக் குறிப்பிட்டார். (உ-7)

# ஸ்ரீ.சு.க.-ஜே.வி.பி.கூட்டு மு.க.வை பாதிக்காது

## ஹக்கீம் கருத்து

(கொழும்பு)



முஸ்லிம் காங்கிரஸின் தீர்க்கமான அரசியல் அதிகாரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக் கும் இடையிலான கூட்டணி ஒரு போதும் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சரு மான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது விடயம் குறித்துஅவர் மேலும் கருத்துக் கூறுகையில், சிங்கள சமுதாயத்தின் தேவைகளைப பூர்த்தி செயவதற்காக ஸ்ரீலங்கா சுதநதிரக் கடசியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஒன்றிணைகின்றன. எனவே முஸ்லிம் சமூகத தின் அரசியல் உரிமைகளை இக் கூட்டணி எந்த வகையிலும் பாதிக்காது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எத்தகைய அனுகூலங்களையும் இதுவரை முஸ்லிம் சமூகத்திற்கு சட்ட விரோதமான முறையில் பெற்றுக்கொடுக்கவில்லை. நாட்டின் சிறுபாணமைக் கட்சிகளுக்குப் பெருமளவு அனுகூலங்கள் தற்போதைய விருப்புரிமை வாக்களிப்பின் மூலமே கிடைக்கவுள்ளன.

பெருமளவு அனுகூலங்கள் கிடைக்கவுள்ள விருப்புரிமை வாக்களிப்பு முறைமூலமே மக்கள் விடுதலை முன்னணியும் அரசியலில் பிரவேசிக்க முடிந்துள்ளது. வன் செயல்களைக் கைவிட்டு ஜனநாயக வழிமுறைகள் மூலம் செயற்பட்டு அரசியல் உரிமைகளை மக்கள் விடுதலை முன்னணி போனற கட்சிகளும் வென்றிருப்பது திருப்தியளிக்கிறது.

நாட்டு மக்கள் மத்தியில் சமாதானமும் சக வாழ்வும் ஒற்றுமையும் தளைத்தோங்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.(உ-18,60)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி தாரணி கேதீஸ்வரன்

அவர்களின் தந்தையார்

**அமரர் க.கணேசபிள்ளை**

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபத்தினை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/மல்லாகம்,
மகாவித்தியாலயம்.

(C-7085)


# • வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையததன் ஆதரவுடன் 'ஜஹ்னுபருவா' வின நெறியாள்கையில் உருவாக்கப பட்ட 'குஹ்க்ஹல்' (விடுதலையின் விலை) என்னும் அஸ்ஸாமிய மொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத்தலைப்புக்களுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர்களான அ.யேசுராசா, க.சட்டநாதர் ஆகியோரின் நெறிப் படுத்தலின் கீழ் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் வருகை தநது பயன்பெற முடியும் என புற நிலைப படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(உ)







யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட பரீட்சை ஆணையாளர் நாயகம் மஹிந்த விஜயசிறி மற்றும் பிரதிப் பரீட்சை ஆணையாளர் போல்அன்ரனி ஆகியோர் அடங்கிய குழுவினர் யாழ்.மாவட்ட கல்விச் சமூகத்துடன் நடத்திய சந்திப்பில் எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்:க.பவன்)

# குடும்பப்-பெண்ணின் சடலம் குளத்திலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் உள்ள பண்டாரக் குளத்தில் இருந்து அழுகி உருக் குலைந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. பின்னர் அது வண்ணார்பண்ணை மனோகராத் திரையரங்குச் சந்தியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான மகேஸ்வரன் மகேஸ்வரி (வயது-45) என்பவருடையது என இனங்காணப்பட்டது.

சற்று மனநிலை பாதிக்கப்பட்டிருந்த இப்பெண்மணி கடந்த 26ஆம் திகதி முதல் காணாமல்போயிருந்ததாகவும், இது குறித்து இவரது கணவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று மு.ப. 10 மணியளவில் அயலவர்களின் உதவியுடன் குளத்தில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்ட மேற்படி சடலம் பிற்பகல் வரை அந்த இடத்திலேயே காணப்பட்டது.(உ-7,4,51)



# ஒலிம்பிக் போட்டிக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

இவ்வாண்டு கிறீஸ்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்போட்டிக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடையும் நிலையில் இருப்பதாக எதேன்ஸ் நகரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டில் செயற்படுத்தப்படவேண்டிய வேலைத்திட்டங்கள்யாவும் 100 வீதம் பூர்த்தியடைந்திருப்பதாக கிறீஸின் கலாசாரத்துறை அமைச்சர் எவாங்கல் வெனிசுலஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது உலகளாவிய ரீதியல் நிலவிவருகின்ற யங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக 2004ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நிகழ்வுகள் எந்தவகையிலும் பாதிப்படையக்கூடாது என்பதற்காக கிறீஸில் எதேன்ஸ் நகருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பலப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்த வெனிசுலஸ் இதுவரை எந்தவொரு விளையாட்டுப் போட்டி நிகழ்வுக்காகவும் வழங்கப்படாத பாதுகாப்புப் பிரிவினர் இப்போட்டி நிகழ்வுகளுக்காகப் பணியில் அமர்த்த இருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (உ-68)

# மெய்வல்லுநர்களைப் பயிற்றுவிக்க வெளிநாட்டவர்கள் ஒப்பந்தம்

இலங்கைத் தேசிய மெய்வல்லுநர் சம்மேளனம், 3வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை இலங்கையின் மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர்களாக ஒப்பந்தம் செய்துள்ளது.

2004ஆம ஆண்டு பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சார்க் விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகளைப் பயிற்றுவிப்பதற்காகவே இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கைத் தேசிய மெய்வல்லுநர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேசிய மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளரான லஷ்மன் டிஅல்விஸ் தலைமையில் இந்த 3பயிற்றுவிப்பாளர்களும் இலங்கை வீர, வீராங்கனைகளுக்கு பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் பாகிஸ்தானின் இஸ்லாமபாத்தில் நடைபெறவுள்ள சார்க் போட்டிகளில இலங்கையில் இருந்து 50இற்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளவிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## விளையாட்டுச் செய்திகள்

### நெடுந்தீவுப் பிரதேச வருடாந்த விளையாட்டுப் போட்டி

நெடுந்தீவு பிரதேச மட்ட வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் துடுப்பாட்டப் போட்டிகளுடன் ஆரம பமாகவுள்ளன.

நீண்டகாலமாக இப்பிரதேசத்தில் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் நடைபெறாமல் இருந்த போதும் 2000ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இப்போட்டி நிகழ்வுகள் இவ்வாண்டுடன் ஐந்தாவது ஆண்டாக நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்டம், கரபந்தாட்டம், எல்லே, கபடிப்போட்டிகள் மற்றும் வலைபந்தாட்ட, உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை முதல் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடச்சியாக இடம்பெறவிருப்பதாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ச.பேரானந்தன் தெரிவித்தார். (உ-68)

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக் கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான ஜனவரி மாதப் பலன்களின் தொடர்ச்சி.**

## கும்பம்



**அவிட்டம் 3,4வது பாதங்கள்-சதயம் 4பாதங்கள்-பூரட்டாதி 1,2,3 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

உங்கள் ஆட்சிக் கிரகமான சனி நட்பு இல்லத்தில் இருப்பதும், ஏழாவது கேந்திரத்தில் நின்ற குருவும் சிறப்பு உயர்மட்ட மனிதர்கள்ால் கௌரவம் இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பதவி உயர்வு, இடமாற்றம் போன்ற நன்மைகளும் இருக்கின்றன. ஆனால் உங்கள் பழைய இடத்தைப் பிடிக்க முடியவில்லை. போடடி, பந்தயம், விளையாட்டு போன்ற வகையில் ஈடுபாடு பயன் இல்லை. பெருமைபேசி காலம் கழிப்பதை விடுத்து செயலில இறங்கவும். அவசியமற்ற மனிதர்களின் சந்திப்பு கௌரவச் செலவுகளை அதிகமாக்கும். திடீர் பிரயாணம் தொழில் வகையில் நல்ல திருப்பத்தை உண்டாக்கும். ஆரம்பத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் மனக்கண் முன் இருந்துகொண்டே இருந்தாலும் வெற்றி உங்கள் பக்கம்தான். வழக்கு வகையிலும் அப்படித்தான் இருக்கும். கணவன் மனைவி உறவில் ஏற்பட்ட இடைவெளி அகன்று விட்டன. கண்ணியம் உடையவர்களாக இருப்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் புதிய திருப்பத்தைப் பெறலாம். வரவேண்டிய பணம் சற்றுக் காலம்கடந்து வந்தாலும் நல்ல நேரத்திற்கு பயன்படுத்துவதாக இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு நிகழ்சசிகள் திருப்தி அளிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எப்படி இருந்தாலும் பிரயாணச் செலவு, கௌரவச் செலவு உங்கள் முன் இருக்கும். உத்தியோகப்பிரிவு மனிதர்களுக்கு பதவியில் மாற்றம். பிறரால் பாராட்டு, இடம்மாறுதல் உண்டு. சிலருக்கு திருமணம் போன்ற சுபச செலவும் உண்டு. புது உடை விருந்தும் கிட்டும். கண்விழித்தல் அடிக்கடி இருக்கும். மேல்மட்ட மனிதர்கள் மிகவும் நல்ல சூழ்நிலையில் இருக்கின்றனர். குடும்ப நன்மையும் இப்போது உண்டாகும். சனியின் பாதிப்பு காரணமாக விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மற்றக் கிரகங்களின் தன்மையில் மேலே கண்ட பலன்கள் ஒருவழியாக நடந்து வந்தாலும் சுபக் கோளின் தன்மையினால் இவைகளுக்குத் தீர்வு உண்டு. மனதிடத் தோடு, செயல்படும் போது இடை இடையே நன்மைகளையும் அனுபவிக்கத் தான் செய்கிறீர்கள். சனியும் சாரமும் ஒன்றுசேர்ந்து குடும்பத்தில் சிக்கல் என்பது தவிர்க்க முடியாதது. இது புதுமணத் தம்பதிகள் கவனித்துச் செயற்பட வேண்டும். பெரும் இடைவெளியை உண்டாக்க நீங்களே காரணம். உங்களுக்கு குருவும் சனியும் கூட்டு நன்மைகளை செய்யக்கூடியவர்கள் என்பதை மறவாதீர். செய்தொழில் திருப்தியான போக்கு இருப்பதை உணரலாம். தனநிலை, குடும்ப நிலையும் இனிமையான போக்கை அதிகரிக்கச் செய்யும். கலியாணம், காதல் தொடர்பு கண்ணியம் கவர்ச்சியுடையதாக இருக்கிறது. மாதக கடைசியில் மட்டும் குடும்பத்தில் பிணக்கு சலன நிலையும் உண்டாக்கும். கலைப்பிரிவு, எழுத்தாளர்கள் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பாராட்டுகள் கிடைக்கப்பெறும். மாணவ மாணவிகளுக்கு கல்வித்தரம் உயர்வு ஏதோ ஒருவகையில் மனதிருப்தி இருக்கும். பூமி, வீடுபோன்ற சொத்து விற்பனை செய்ய வேண்டிய அவசியத்தை உண்டாக்கும்.

## மீனம்



**பூரட்டாதி 4 வது பாதம்- உத்திரட்டாதி 4 பாதங்கள்-ரேவதி 4 பாதங்கள் வரை- 9 பாதங்கள்**

இந்த நான்காவது கேந்திரத்தில் இருக்கும் சனியைத்தான் கண்டத்துச் சனியென்பர். எனவே இந்தச் சனியை நன்மைக்குரியதாகப் பேச முடியாது. உங்கள் ஜெனம அதிபதியான குரு ஒல் மறைந்து இருப்பதால் பொதுவாக நன்மை குறைவுதான். புதிய தெம்பு பிறக்கக்கூடும் என்றாலும், அதன் சாதக பாதகங்களை ஏற்கவேண்டியவர்கள் நீங்கள்தான். சகோதர சகோதரி வகையில் சிலசமயம் சலனப்போக்கு உடையவர்களாக இருப்பீர்கள். குடும்பத்தில் இது புகைச்சலாக இருக்கும். சிலர் பூர்வீகச் சொத்து வகையில் சில மாற்றங்களைச் செய்யவேண்டிய அவசியமும் உண்டாகும். பெண்களால் கௌரவக்குறைவான வார்த்தைகள் உண்டாகும். ஸ்தாபன வழியில் பாராட்டு உண்டாகும். பண வரவு கடன் தீர்க்க உதவியாக இருக்கும். பண்புக்காக உயர் மட்ட ரீதியில் பரிசுக்குரியவராக ஆவீர்கள். சிலர் பலம் மிக்க இலாகாவைப் பெறுவது போன்ற உயர்வுகள் கூட இருக்கும். மாணவ, மாணவிகளுக்கு கல்வி உயர்வு சாதாரணமாக இருக்கிறது. மறைத்து வைக்கப்பட்ட காரியங்கள் சில உங்களுக்கு சாதகமாக வெளியாகும். குடும்ப வகைக்கு மருத்துவச்செலவு தவிர்க்கமுடியாது. தனநிலையில் தட்டுப்பாடு இல்லாவிட்டாலும் முக்கிய செலவுகள்தான் அதிகமாகும். தாய்வழியில் நடக்கும் விஷயங்களுக்கு பிரயாண முக்கியத்துவம் உண்டாகும். தூரதேசக் கடிதம் வருவது, பழைய விஷயங்கள் சிலவற்றைப் புதுப்பிக்க உதவியாக இருக்கிறது. பூர்வீகச் சொத்து, கட்டிய கட்டடம் இவற்றில் முக்கியமான மாற்றம் செய்யவேண்டிவரும். முக்கிய காரியங்களை முடிப்பதில் துரித போக்கு உடையவர்களாக இருப்பீர்கள். விடுமுறையை கழிக்கச் செல்லும் இடத்தில் வினையைத் தேடிக்கொண்டு வராமல் இருந்தால் போதும். செலவுகள் கடுமையாக உள்ள காலம் இது. சுப விஷயங்களில் கலந்துகொள்வதும், விருந்துண்பதுமாக மகிழ்ச்சியுடன் இருந்த நீங்கள், இப்போது குடும்பத்தில் எழும் சில பிரச்சினைகளில் மனச்சஞ்சலத்தைப்பெற இருப்பீகள். உறவினர் அன்பை உதறித்தள்ளவேண்டிய நிலைக்கு உந்தப்படுவீர்கள். மனதை ஒருநிலைப்படுத்த முடியாத நிலையும் இருக்கும். நீங்கள் எதிர்பாராமல் வாகன வகையில் செலவு பெறுவீர்கள், என்பதால் முன்யோசனை தேவை. அரசியல் மனிதர்கள் சந்திப்பு உங்கள் அவசர பிரச்சினைகளை தீர்க்காது. அதிகாரிகளை சந்திப்பது காலம்கடந்த காரிய சாதனைக்கு வழிவகுக்கும். தற்பொழுது நீங்கள் பலமுடையவர்களாக திகழ்வீர்கள். தனம் கொடுக்கல் வாங்கலில் தாராள நிலையைப் பெறுவீர். எப்போதோ செய்ததன் விளைவு இப்போது உங்களை மற்றவர் குறை கூறவேண்டி இருக்கும். அவசரப்பேச்சு ஆத்திரச் செயல் இவை கூடாது. அரசாங்க உயர்மட்ட மனிதர்கள் சந்திப்பு ஓரளவு திருப்தியாக இருந்த போதிலும், நடைமுறைக்கு வரவில்லை. குடும்பச் சொத்து வகையில் ஏற்பட்ட சலனப் போக்கு இப்போது குறைந்து இருக்கின்றன. சிலர் அயல் நாட்டு பிரயாணத்தை மேற்கொள்வது அவசியமாக இருந்தாலும் மந்தமாகவே இருக்கும். வேகம் குறைந்துதான் இருக்கிறது. வழக்கு இருப்பின் செலவோடு முடியும். பாதிப்பு இருக்காது.

# உங்களுக்கு எப்படி?

**பன்னிரு ராசிகளுக்குமான பெப்ரவரி மாதப் பலன்கள்.**

## மேடம்



**அச்சுவினி 4 பாதங்கள்-பரணி 4 பாதங்கள். கார்த்திகை முதல் பாதம் வரை-9 பாதங்கள்**

இப்போது குரு வக்ரம் ஏழில் கேது மட்டும் தனித்து நிற்க, மனதில் ஒருவகை யான திகில் இருந்து கொண்டே இருக்கிறது. தொழில் ரகசியங்களைக் காக்க நிதானமாக செயற்படுவீர. சிலர் ஓய்வுக்கு வேண்டிய போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகையில் ஈடுபாடும் உண்டாகும். உங்கள் காரியம் மட்டுமல்லாமல் மற்றவர்களுக்காகவும் செயற்படுவீர்கள். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றியமைப்பது அல்லது விற்பதும் உண்டாகும். தேக ஆரோககியம் திருப்தியாக இருக் கும். வாகனம் மாற்றுவது அல்லது வாங்குவது உண்டாகும். குடும்ப உறவினர்களுடன் சேர்ந்து விருந்துண்பதும் இருக்கும். உறவினர் சந்திப்பு, மகிழ்ச்சியான சில நிகழ்ச்சிகளுக்கும் வழிவகுக்கும். இதனால் குடும்பத்துடன் பிரயாணம் ஏற்கவேண்டிய அவசியமும் உண்டாகும். குழந்தைகள் ஆரோக்கியம் மனத்திருப்தியளிப்பதாக இருக்கும். கலைப் பிரிவு, ஆடல், பாடல் சினிமா தொழில் உள்ளவர்களுக்கு புதிய முயற்சி அப்படியே கைகூடிவரும். மேற்கு, வடக்கு திக்கு மனிதர்களின் அரவணைப்பு உங்கள் தொழில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு அலுவலகப்போக்கு திருப்தியாக இருக்காது. சில சமயம் கடுமையான போக்கு இருக்கும். சில சமயம் கசப்பான வார்த்தைகளும் இடம்பெறக்கூடும். உங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சிக்கவும். உங்கள் கையெழுத்தே உங்களுக்கு எதிராக வரக்கூடும். எதையுமே மறைத்துவைக்க முடியாத நீங்கள் சிலவகையினை மறைத்து வைக்கவேண்டியிருக்கிறது. செய்யும் தொழிலில் இணைக்க முடியாத காதல் விஷயங்கள், ஆனால் சிலவகையில் அவர்களை இணைத்துக்கொண்டு வருகிறீர்கள். இது எங்கே போய்முடியும்? என்கிறது சுக்கிரன். தொழில் வழி தனநிலையில் பாதிப்பு இல்லை. ஆனால் வேலை ஆட்களின் போக்கு சில சமயங்களில் உங்களை நிலைகுலைய வைத்துவிடும். உங்கள் வளர்ச்சி கண்டு உடனிருப்போரே பொறாமைப்படவேண்டி இருக்கும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் தவிர வேறு ஒன்றும் இல்லை. அயல்நாட்டுப் பிரயாணத்தை ஏற்பது திடீர் என்று இருக்கும். நீங்கள் புதிய கருத்துக்களை உங்கள் தொழிலில் புகுத்த, உங்கள பழைய நணபாகள உதவியாக இருப்பர். படிப்படியே செய்தொழில் வேகம் பெறும். குடும்பத்தினருக்கு புது உடை பழைய ஆபரணங்கள் வந்து சேரும். கணவன், மனைவி இடையே மகிழ்ச்சி உண்டாகும். இப்போது உததியோகப் பிரிவு ஆண் பெண்களுக்கு புதிய மனிதர்கள் சந்திப்பு பெரிய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். கலைப் பிரிவினருக்கு லட்சக்கணக்கில் இலாபத்தை உண்டாக்குவான். இந்தச் சுக்கிரன் நல்ல மனிதர்கள் சிலரையும் இப்போது அறிமுகம் செய்து வைப்பான். குடுமபத்து நண்பர்கள், உறவினர்களது திருமண இல்லங்களுக்குச் சென்று விருந்துண்பதும் உண்டாகும். இங்கே சந்திப்பவர்கள் சிலர் உங்களுக்கு ஆகாதவர்களும் உண்டு. அவர்கள் மூலம் அறியப்படும் தகவல்கள் உங்கள் தொழிலிலுக்கு மிக மிக முக்கியம் வாய்ந்தவையாக இருக்கும்.


## இடபம்



**கார்த்திகை 2,3,4ம் பாதங்கள்-ரோகினி 4 பாதங்கள்-மிருக சீரிடம் 1,2,பாதங்கள் வரை-9 பாதங்கள்**

இப்போது சுக இல்லத்து குருவக்ரம் காலில் நின்ற சனி காலில் காயத்தை உண்டாக்குவான், எச்சரிக்கை தேவை. தூரத்துச் செய்தி அவ்வளவு திருப்தியாக இல்லை. சுப விஷயம்குறித்து எதிர்பார்த்த மனிதர்கள் கால தாமதத்துடன் வந்து சேருவர். பணப்பற்றாக்குறை தொடர்ந்து இருக்கும். பழைய கடன்கள் இருந்தாலும் பாதிப்பு இல்லை. அரசியல, அரசாங்க சமபந்தமான மனிதர்களின் சந்திப்பு எழுத்துவகை உத்தரவுக்கு உதவியாக இருக்கும். வெற்றிமேல் வெற்றி இருக்கிறது. பதவி மாற்றம் புது உடைகள் சோக்கையும் கௌரவச் செலவும் இருக்கிறது. புத்திர புத்திரியர்கள் நிலையில் பெருத்த முன்னேற்றத்தைக் காணும் காலம். சுப விஷயம்குறித்து கடிதங்களும் வாழ்த்துக்களும் வரும். பிராயாணம் குடும்பத்துடன் ஏற்பது தவிர்க்கமுடியவில்லை. போட்டி, பந்தயம் விளையாட்டு போன்ற வகை ஆதாயம் இருக்கும். நீங்கள் எப்போதோ செய்த காரியத்தின் பிரதிபலன் மாத கடைசியில் மனச் சலனத்தை உண்டாக்கும். மாணவ மாணவியர்களுக்கு நுட்பமான அறிவு வளர்ச்சியும் கல்வி மேன்மையும் இருக்கிறது. வெளியூரில் இருநது அன்பளிப்புப் பெறுவது, நாகரிகப் பொருள் வாங்குவது, திருமணம் போன்ற சுபச் செலவுகள் இல்லை என்றாலும், அவ்வழியில் முக்கியருதர் உறவினர்களைச் சந்திக்கும் அவசியச் செலவை உண்டாக்கும். சில சமயம் கௌரவக்குறைவான வார்த்தை உண்டாக்கும். இந்த நடுப்பகுதிக்குமேல்தான் சனிக்கு சாரம வேலைசெய்யும். உறவில் அவ்வப்போது சிறு சிறு சச்சரவுகள் தலைதூக்கி, பின்னர் மறையும். புதிய வீடு, மனை போன்ற ருதிரச் சொத்துக்களை வாங்கத் திட்டமிடுவார்கள். உடல் ஆரோக்கியம் நல்லவிதமாகக் காணப்படும். பொருளாதார உயர்வு ஏற்படுவதால் சிலகாலம் நோய்வாயப்பட்டிருந்தவர்களும் பரிபூரண ஆரோக்கியத்தை அடைவார்கள். மக்கள் பெருமை, சுற்றத்தார் வருகை, வார்த்தைக்கு மகிழ்ச்சி, பெரியோர் சேர்க்கை, எதிலும் வெற்றி, சிலர் வாகனம் வாங்குவது புதுமனை குடிபுகுவது போன்ற நன்மைகளும் இருக்கின்றன. தனநிலை, தன்னம்பிக்கையை ஊட்டும். சிலவகையில் உங்களைப் பெரிய பொறுப்புக்களில் ஈடுபடுத்திக்கொள்ளப் போகிறீர்கள் என்பதில் மனச் சலனம் இன்றி இருக்கவேண்டும். மற்றவர் வார்த்தைக்கு செவிசாய்க்க வேண்டாம். குடும்பத்திற்கு புது பொருள்வாங்குவதும் உண்டு. வழக்குப்பற்றிய பயம்இல்லை. கடனைக் குறித்து கவலைப்பட வேண்டாம். அவை கட்டுக்கடங்கித் தான் இருக்கிறது. நரம்புநோய், இருமல், சீதள பாதிப்பு கூடஇருக்கும். கணவன் மனைவி உறவு நன்றாகவே இருக்கும். வழக்கு உள்ளவர்கள் செலவைத்தான் ஏற்கவேண்டி இருக்கிறது. சகோதரர் சகோதரிவழியில் மன திருபத்தி இருக்காது. புத்திரியர்கள் கல்வி மேன்மையிருக்கும். குடும்பத்தின் சூழ்நிலை அமைதியர்க இருக்கிறது. குழந்தைகள் ஆரோக்கியம், கல்வி நிலை ஆகியன திருப்தியாக இருக்கின்றன. சிலர் நாகாிக வாகனம் குடும்ப வகைக்கு நாகாிகப் பொருடகள் வாங்குவதும் உண்டு.

## மிதுனம்



**மிருகசீரிடம் 3,4,வது பாதங்கள்-திருவாதிரை 4 பாதங்கள்-புனர்பூசம் 1,2,3 பாதங்கள்வரை 9-பாதங்கள்.**

இம்மாதம் குருவக்ரம் பெற்றது நன்மை இல்லை என்பது உண்மைதான். லாப இல்லத்து ராகு, செவ்வாய் சில புதுவழிகளில் தன ஆதாயத்தைக் கொடுப்பவர்களே. எனவே இப்போது இருவழி தனவரவுக்கும் வழி உண்டாகும். புதிய தொழில் அமைப்பை உருவாக்க உங்கள் முயற்சி அதிகமாக இருக்கும். இதனால் பிற இனத்தவர்கள் நட்பும் முக்கிய அங்கம் வகிக்கும். அரசாங்கம் அரசியல் வாதிகளின் தொடர்பு மிகவும் நெருங்கியதாக இருக்கின்றது. விட்டுப் போன தொழில் சம்பந்தமான கணக்குகளை சீர்செய்யாமல் வைத்திருப்பது சில சமயம் ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுக்கும் என்பதால் முன்யோசனையுடன் நடந்து கொள்வதும் மிக அவசியமாகும். உத்தியோகப் பிரிவு ஆண் பெண்களுக்கு உயர் பதவியைப் பெறும் காலமாகும். நல்ல நண்பர் மற்றவரை நம்பி எந்தக்காரியத்திலும் ஈடுபடவும் முடியாது. கடைப்பகுதி இக்காலம் தந்தைவழி உறவில் கருமச் செலவுகளை உண்டாக்கும். சிலருக்கு தவறான தொடர்புகளும் உண்டாக வாய்ப்பு இருக்கிறது. இந்தப் போக்கு இல்லறத்தில் இடைவெளியை உருவாக்கிவிடும். எச்சரிக்கை, உத்தியோகப் பிரிவு ஆண் பெண்களுக்கு இதுபோன்ற தடைகள் இருக்கின்றன. குடும்ப உறவினர் இப்பொழுது முழுத்திருப்தியுடன் எதிலும் செயல்படமாட்டார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் நீங்கள் சொத்து அல்லது தொழில் வழியில் எந்தவிதமான மாற்றமும் செய்யக்கூடாது. பழைய கடன்கள் வழக்கு அப்படியே இருந்தாலும் பாதித்துவிடும் என பயம் வேண்டாம். ஒரு வகையில் நீங்கள் தைரியம் உடையவர்களாகத் திகழ்வீர்கள். முதலீடு செய்வதில் முக்கியத்துவம் கொடுக்கத் தவறமாட்டார்கள். குடும்ப முன்னணி திருப்தியாக இருக்கிறது. உங்கள் தொழில் கூட்டு மனிதர்களும் எல்லா வகையிலும் இணக்கமாக இருப்பதை உணரலாம். பொது வாழ்வு ஈடுபாடு, கௌரவ பாராட்டுவசதி மனத்தெளிவை உண்டாக்கிவிட்டது. மேலும் தொழில் சம்பந்தப்பட்ட மனிதர்கள் சந்திப்பு எழுத்துமூலம் நன்மைபெறுவது குறிப்பிடத்தக்கது. இப்போது குழந்தைகள் வைத்தியச்செலவு முக்கியம் வாய்ந்ததாக இருக்கும். இப்போது பழைய கடன்கள் வகையில் கவனம் செலுத்த வேண்டும். வழக்குக்கூட சிலருக்கு அலைச்சல், பண விரயத்தைக் கொடுக்கும். உங்கள் வார்த்தைக்கு நன்மதிப்பு உள்ள காலம் இது. சகோதர சகோதரி வக்கைக்கும் உபகாரம் செய்வது சுபசெலவுகளும் இருக்கும். குடும்பத்தில் புகைந்துகொண்டிருந்த விஷயங்கள் சில இப்போது வெடிக்கும். குடும்பத்தில் அடுத்தடுத்து சுப செலவுகளை ஏற்கவேண்டி இருக்கும். பெண்குழந்தை பிறக்கும் காலம் இது. குழந்தை பிறப்பு யாதகத்தில் குருவலிமை பெற்றிருந்தாலோ ஆண்குழந்தை பிறக்கும். அயலநாடு பிரயாணம் சிலருக்கு மிக மிக அவசியமாக இருக்கும். தனம், கொடுக்கல் வாங்கல் நிலையில் தாராளப் போக்கு எதிர்பார்த்த வேலைகள் அமைப்பாகக்கூட வருவதும் மனமகிழ்ச்சியை அவர்கள் மூலம் எழுத்து நன்மையும் உள்ள காலம் இது.

**சோதிடமேதை ராமன்**

# இனப் பிரச்சினைத் தீர்வுக்கு

## புதிய யோசனைகள்

### ஸ்ரீ.சு.க.முன்மொழிவு

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான புதிய யோசனைகளை ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் முன்மொழிந்துள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் வகையில் நாட்டின் அனைத்து பாகங்களையும் உள்ளடக்கியதான இடைக்கால அரசியல் அமைப்பை உருவாக்குவதே இப் புதிய யோசனைகளின் அடிப்படையாகும்.

இந்த தற்காலிக நிர்வாக அலகின் ஊடாக வடக்கு-கிழக்குப் பகுதி மக்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இவ்வாறு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும்போது ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப, கூடுதலாகவோ அன்றி குறைவாகவோ அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

சமச்சீரான அதிகாரப் பரவலாக்கத்தின் ஊடாக நாட்டின் இனப் பிரசசினைகளை ஒருபோதும் தீர்க்க முடியாது. வடக்கு-கிழக்குப் பகுதிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப் படாத இடைக்கால அலகின் ஊடாக அதிகாரம் வழங்கப்படுவது சாத்தியமாகாது என ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (உ-18,60)

# கல்வியுடன களத்தையும் காத்தவர்கள்

## எமது ஈழத்து மாணவர்கள்

### தங்கன் புகழாரம்

(கிளிநொச்சி)

அறிவு சார்ந்த நூல்களோ வேறு வசதிகளோ கிடைக்காத நிலையில் போருக்கு முகம்கொடுத்தவாறே எமது மாணவர்கள் கல்வயில் சாதனை படைத்துள்ளனர் என தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் எஸ்.தங்கன் தெரிவித்துள்ளார்.

சுமிமீம மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கணனிப் பயிற்சிநெறியில் பங்குகொண்டோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முள்ளியவளையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே தங்கன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும்உரையாற்றுகையில,

எமது மாணவாகள் படிப்பதற்கு ஏற்ற சூழலோ இடவசதிகளோ ஏது மற்ற காலபபகுதிகளில் கள முனைகளில எமது போராளிகளுக்குத் தோள் கொடுத்தவாறே தமது கல்வியைத் தொடர்ந்தார்கள்.

இன்றைய கால்கட்டததில் தகவல் தொழில்நுட்பத்தில் அடியெடுத்துவைககும் மாணவர்கள் தொடர்ந்தும் பல துறைகளில் ஆர்வம் செலுத்தி வளரவேண்டும. இந்த வளர்ச்சி எமது தேச வளர்ச்சிக்குத் தேவையானது என்று தெரிவித்தார்.(உ-64,8)

# புத்தாண்டு தினத்தில

# வறிய மக்களுக்கு உதவி


(யாழ்ப்பாணம்)

2004ஆம் ஆண்டு பிறப்பை முனனிட்டு வறிய மக்களுக்கு உதவும் வகையில் 55வது சேனையக தளபதியின் வழிகாட்டலுக்கமைய 2004.01.01 அன்று மிருசுவில் கெற்பேலி கிராமத்தில் வசிக்கும் சுமாா 460 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் 55 சேனையக தளபதி பிரிகேடியர் வ. ஆர். சில்வா, தொண்டர் காலாலப்படையின் கட்டளை அதிகாரி 554 படையணித் தளபதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல கெற்பேலி கிராம உத்தியோகத்தர் சிறந்த ஒத்துழைப்பை வழங்கியதாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





ஈழத்தமிழர் விடயத்தில் கொண்டுள்ள நிலைப்பாட்டை மாற்றுக

# இந்துக் குருமார் ஒன்றியம் இந்தியப் பிரதமருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழரின் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியா கடைப்பிடித்து வரும் நிலைப்பாட்டை இட்டு நாம் மிக வருத்தம் கொண்டுள்ளோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் 28.12.2003 திகதியிட்டு இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் ஆகியோருக்கு பிரதிகளிடப்பட்ட அக்கடிதத்தில் மேலும், தென்னிலங்கைப பேரினவாத சக்திகள் எமது நியாயமான கோரிக்கைகளை மறுப்பது மட்டுமன்றி இன அழிவுக்கான கொடூரப் போரையும் தொடுத்திருந்தது. இதனால் எம் இனத்தை அழியவிடாது உரிமைகளை வென்றெடுத்து கௌரவத்துடன் வாழ்வதற்கு நாமே தற்பாதுகாப்புப் போர் ஒன்றை மேற்கொள்வதற்கு நிற்பந்திக்கப்பட்டோம.

எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற தமிழீழ விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக தமிழ் மக்களும் ஏன் சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ளன.

பேச்சுவார்த்தைகளில் முழு மூச்சுடன் புலிகள் இறங்கினர். போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் சில ஆத்திரமூட்டும் சம்பவங்கள் ஏற்பட்டும், புலிகள் பொறுமையை கடைப்பிடித்திருந்து ஜனநாயகத்தீர்வு மட்டில் அவர்கள் கொண்டுள்ள மன உறுதியை எடுத்துக் காட்டினர்.

இது அவ்வாறிருக்க தென்னிலங்கைத் தலைமைத்துவத்தில் நிலவும் அரசியல் குழப்பம், கடந்த 5 தசாப்தங்களாக அவர்கள் பின பற்றிவந்த அரசியல் கலாசாரத்தை பிரதிபலிக்கின்றது.

இப் பினனணியில் இந்திய அரசானது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டப பாதையில் அளப்பரிய தியாகங்களைப் புரிந்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு "பயங்கரவாதிகள்" என்ற பெயரைச் சூட்டி அவர்களைப் புறந்தள்ளுவதும், தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவம் பக்கம் சார்ந்து நின்று தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளுக்கு பாதகமான நிலைப் பாட்டைக் கொணடிருப்பதும் எமக்கு வேதனையைத் தருகின்றது.

இனிவரும் காலங்களில் தங்களுடைய நிலைப்பாடு மாற்றமடைந்து ஈழத்தமிழ் மக்களுக்கு விடிவுதரும் முழுமையான பங்களிப்பைக் கொணடதாயிருக்க வேண்டும் என்று மண்டும் கோருகின்றோம் என்றுள்ளது. (உ)

# போஷாக்கு உணவு வழங்கல்

## மார்ச் மாதம் முதல் அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ.வலயக் கல்விப்பாடசாலைகளில் தரம் 1இல் கல்வி பயிலும் மாணவாகளுக்கான போஷாக்குணவு வழங்கும் திட்டம் இவ் வருடம் பெப்ரவரிமாதம் முதல் அமுல் படுத்தப்படவிருப்பதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக போஷாக்கற்றவர்கள் என இனம்காணப்பட்ட 250 மாணவர்கள் பயன்பெறவுள்ளனர்.

இதேவேளை, போஷாக்கு உணவு வழங்குவதற்குத் தகுதியானவர்களை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களே உறுதிசெய்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-7)

# இந்து கலாசார அமைச்சினால்

## 200 மலசல கூடங்கள்

### துன்னாலையில் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

துன்னாலை மேற்கு மற்றும் துன்னாலை தெற்கு கிராமங்களிலுள்ள வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களுக்கு இந்து கலாசார அமைச்சு 200 மலசல கூடஙகளை அமைத்துக் கொடுக்கவுளளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்டு அடிப்படை வசதிகளற்ற நிலையில் மேற்படி பிரதேச மக்கள் வாழ்ந்து வருகிறனர்.

இதனால் இங்கு தொற்று நோய பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளமையை இப்பகுதி மக்கள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனடம் சுட்டிக் காட்டியதற்கு இணங்கவே, இவ்வாறு 200 மலசல கூடங்களும் அமைத்துக் கொடுப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

# தேர்தலை நடத்தத் தீர்மானித்தால் அரசு அதற்கு ஒத்துழைக்கும்

### அமைச்சர் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

தோதலை எதிர்நோக்குவதற்கு எந்த வேளையிலும் அரசாங்கம் தயாராக இருக்கின்றது என வாத்தகநுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அமைச்சர் ரவி கருணாநாயக்க விடுத்துள்ள அறிக்கையில்,

தேர்தலை நடாத்துவதுபற்றி ஜனாதிபதி தீர்மானித்தாலும் அதற்கான சகலவிதமான உதவிகளையும் வழங்க அரசாங்கம் எந்தவேளையிலும் தயாராக உள்ளது.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொறுப்பேற்ற நாட்டின் முக்கிய 3அமைச்சுக்களான பாதுகாபபு,உள் துறை, மக்கள தொடர்பாடல் ஆகியவற்றை மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கான அவசியங்கள் தற்போது ஏற்பட்டுள்ளன.

அவ்வாறு ஜனாதிபதி தான் பொறுபபேற்ற இம் முக்கிய 3 அமைச்சுக் களையும் மீளக்கையளிக்கத் தயாராக இல்லாத பட்சத்தில், பாராளுமன்றம் கலைக்கப்படுவதுடன், பொதுத தேர்தல் ஒன்றை நடாத்துவதும் மாற்று வழிகளாக அமையும்.

ஐக்கிய தேசியக்கட்சி ஒருபோதும் பின்வாங்கியதில்லை. எனவே பொதுத் தேர் தல் ஒனறை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் எந்த வேளையிலும் தயாராகவே உள்ளது எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. (உ-18,60)

பொதுமக்களைச் சநதிப்பதற்கு

### வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் வருடாநதப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோயில் வீதியில் அமைந்துள்ள இணையக் காரியாலயத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களினால் 2004 ஆம ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டு முககிய தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளன.

மேற்படி கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையததில்பதிவு செய்யப்பட்டுள்ள 14 அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-4)

நவீனரக இயந்திரத்தின் துணையுடன்

# யாழ்.மாவட்ட வீதிகளை மட்டப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வீதிகளை மட்டப் படுத்துவதற்கென நவீனரக இயந்திரம் ஒன்றை வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொள்வனவு செய்யவுள்ளது.

யாழ்.மாவட்டததில் உள்ள வீதிகளில் பல நிலமட்டத்தைவிடத் தாழ்வாகக் காணப்படுகின்றன. இது மழைநீர் தேங்கி நிற்பதற்கு ஏதுவாகின்றது. இதனால் வீதிகள் விரைவில் சேதமடைந்து விடுகின்றன.

இதனைத் தவிர்க்கும் விதத்தில் வீதியின் இருமருங்கிலும் உள்ள நிலத்தை, வீதியைவிடத் தாழ்வாக்கி இலகுவாக அதனை மட்டப்படுத்தும் இயந்திரம் ஒன்றின் தேவைப்பாடு குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொது முகாமையாளரிடம் சுட்டிக்காட்டப் பட்டதற்கு இணங்க மேற்படி இயந்திரத்தை விரைவில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை யாழ்.மாவட்ட முகாமையாளா் ஸ்ரீனிவாசன் தெரிவித்தார். (உ-4)

இந்தியாவின் உதவியுடன்

# பலாலி விமான நிலையம் மிக விரைவில் திருத்தம்

(கொழும்பு)

இந்தியாவின் நிதியுதவியுடன் பலாலி விமான நிலையம் மிக விரைவில் திருததம் செய்யப்படவுள்ளது.

பலாலி விமான நிலையத்தை திருத்துவதற்கு இந்தியா உதவிகளை வழங்க முன்வந்துள்ளதுடன், 500 மில்லியன் ரூபா நிதியை இதற்கென வழங்குவதற்கும் உடனபட்டுள்ளது.

இராணுவத்தளபதி லெப்ரினன் ஜெனரல் லயனல் பலகல்ல அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது அங்கு உயர் அதிகாரிகளுடன் இதுவிடயம் குறித்து நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பலனாகவே இதற்கான இணக்கம் தற்போது காணப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

அத்துடன், சேதமடைந்துள்ள விமான நிலையத்தின் ஏனைய பகுதிகளையும் திருத்தம் செய்யும் முகமாகவே இந்தியா இவ்வுதவிகளை வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18,61)

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும் -குறள்

வலம்புரி

# முஸ்லிம் காங்கிரஸ் குழப்புகிறது-குழம்புகிறது

இலங்கை அரசியலில் இடைக்கால யாப்பு அமைப்பது அவசியம் என்ற புதுவகையானதொரு கோரிக்கையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துள்ளது.

விடுதலைப்புலிகளும் அரசும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தபோது முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பத்தில் முன்வைத் திருந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் வைத்த கோரிக்கை சமாதான முயற்சியை குழப்பிவிடுமோ என்ற ஏக்கத்தின் மத்தியில் அதற்கு தீர்வுகாண்பதற் காக சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் அரசு தரப்பு பிரதிநிதிகளில் ஒருவராக அமைச்சர் ரவூப் ஹக்கீமைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நியமித்தார்.

இதனால் ஹக்கீம் ஓரளவு அமைதியடைந் தாலும் அதாவுல, ஹிஸ்புல்லா போன்ற முஸ்லிம் பிரதிநிதிகள் 'தனித்தரப்பு'என்ற விடயத்தில் இறுக்கமான போக்கையே கொண்டிருந்தனர்.

இத்தகைய குழப்பநிலைகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸு க்குள்ளேயே பெரும் புயலை ஏற்படுத்தி விட்டது.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகப் பங்குபற்ற வேண்டும் என்ற கோரிக்கை கள் வலுப்பெற்ற நேரத்தில், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும்,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் ஒப்பந்தங்களை செய்துகொண்டனர்.

இவ்வாறு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் வடபுலத்திலிருந்து புலம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கு வாய்ப்பளித்தது.

எனினும் பிரபா-ஹக்கீம் ஒப்பந்தம் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்கு பற்றுவதற்கு இடங்கொடுத்ததாக தெரியவில்லை.

இந்நிலையில் வடக்குக் கிழக்கு இணைந்த மாகாண சபைக்கான திட்டவரைபை விடுதலைப் புலிகள் கையளித்தனர். இத் திட்டவரைபின் அடிப் படையிலேயே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப் படவேண்டும் என்பது புலிகளின் கோரிக்கை. இதனை அரசும் ஏற்றுக் கொண்டது.

தம்மால் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக் கால சபைக்கான திட்ட வரைபில், முஸ்லிம்களின் உரிமைகள், அவர்களின் அபிலாசைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது என விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். ஆனால் முஸ்லிம் காங்கிரஸோ புலிகள் சமர்ப்பித்த இடைக்கால சபைத்திட்டம் முஸ்லிம்களின் உரிமைகள் பற்றி எதனையுமே உள்ளடக்கவில்லையென தெரிவித்ததோடு, தாங்களும் ஓர் இடைக்கால சபைக்கான திட்ட வரைபை முன்வைத்தனர்.

இலங்கையில் கடந்த இருபது வருட காலமாக நடைபெற்று வரும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமாயின் அது விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்து வதன் மூலமே சாத்தியமாகும்.

இதனைவிடுத்து முஸ்லிம் காங்கிரஸோடு பேச்சு நடத்துவதில் யுத்தம் தொடர்பில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. இவ்வாறு அவர் களுடன் பேச்சு நடத்துவதால் எந்த பயனும் ஏற்படப்போவதில்லை என்ற கருத்து முஸ்லிம்களின் உரிமையை-அவர்களின் அபிலா சைகளை நிராகரிப்பதாகப் பொருள்படாது.

ஆக, முதலில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமாயின் முதலில் சமாதானம் வரவழைக்கப்பட வேண்டும் இதற்காக வீடுதலைப்புலிகளும் அரசும் பேசுவதே உகந்தது.

இதுவே இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான படிமுறைகள். இதனை விடுத்து முஸ்லிம்கள் தனித்தரப்பாக பேச்சுக் களில் கலந்து கொள்ளவேண்டுமெனக் கோரு வதோ, அன்றி முஸ்லிம்கள் தரப்பும் இடைக்கால சபைத்திட்ட வரைபை முன்வைப்பதோ சமாதானத்தைக் கொண்டு வரமாட்டாது.

மாறாக இவை சமாதானத்தை குழப்புவ தாகவே அமையும். இதற்கு மேலாக இப்போது முஸ்லிம் காங்கிரஸ் இடைக் காலஅரசியல் யாப்பு உருவாக்க வேண்டும் எனக் கோருவது தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்பும் நடவடிக்கையாகும் .

# அரசியல் வாதிகளின் பின்னால் செல்ல அரசசார்பற்ற நிறுவனங்கள் தயாரில்லை

## மொனறாகலை மாவட்ட இணைப்பாளர் வீர ரத்தின சமாதானக் கலந்துரையாடலில் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை எந்த இடத்தில் யார் உடைத்தாலும் அதற்கு எதிராக குரல் கொடுப்பதற்கு மொனறாகலை மக்கள் என்றுமே தயாராகவுள்ளனர். எந்தவிதமான எதிர்ப் புகளும் பயமுறுத்தல்களும் சமாதானத்துக்கு ஏற்படுத்தப் பட்டாலும் அதை எதிர்ப்பதற்கு தமிழ் - சிங்கள மக்கள் என்றும் தயாராக இருக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த மொனறாகலை மாவட்டத்தின் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப் பாளரும் வகிலிகினி அபிவிருத்தி மையததின் செய லாளருமான கே.ஜீ.கே. வீர ரத்தின யாழ்ப்பாணம் வை.எம். சீ.ஏ.மண்டபத்தில் கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற சமாதானம் பற்றிய கலந்துலையாடலில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார.

மொனறாகாலை மாவட்டத்தில் இருந்து வந்திருந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் கிராமியமட்ட அமைப் புகளின் 80க்கு மேற்பட்ட சிங்கள- தமிழ் பிரதிநிதிகள் பங்கு பற்றியிருந்த இந்தக் கலந்துலையாடலில் வீரரத்தின தொடர்ந்தும் உரையாற்றும் போது.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசசார்பற்ற நிறுவனங்களும் கிராமிய மட்ட அமைப்புகளும் அக்கறை யுடன் ஈடுபடவேண்டும். அரசியல் வாதிகளால் என்றுமே நிரந்தரமானதும் நீடித்ததுமான சமாதானத்தை ஏற்படுத் திவிட முடியாது. அரசியல்வாதிகள எபபோதும் அடுத்த தேர்தல் பற்றியே சிந்திக்கின்றார்கள். அவர்களுக்கு மக் களின் அவலங்கள் பற்றி எத்தகைய கவனமும் இல்லை.

எமக்கு சமாதானம் தேவை என்றால நாம் அதற்காக உழைக்கவேண்டும, குரல கொடுக்கவேண்டும். யுத்தத்தின் மூலம் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வினைக் கண்டு விட முடியாது. எமக்கு மக்கள் தான் வேண்டும். அரசியல் வாதிகள தேவையில்லை. நாம் அவர்களின் பின்னால் போவதற்குத் தயாராகவில்லை.

யுத்தத்திற்கு எதிராக தமிழ் மக்களும் சிங்கள மக்க ளும் இணைந்து குரல் கொடுக்கவேண்டும். சமாதான த்தை எல்லோருமே விரும்புகின்றாகள் ஆயினும் அதற்காக நாம்பாடுபட முன்வருவதில்லை. சமாதானத்தை ஏற்படுத துவதற்கு நாம் கடுமையாக உழைக்கவேண்டும். இருபது வருடகாலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்படுத்தப் பட்ட யுத்தத்தின் மூலம் ஏறபட்ட அழிவுகள், சேதங்களைப பார்வையிட்டு நாம்மிகவும் வேதனையடைந்துள்ளோம்.

யுத்த சூழ்நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் எத்தகைய இன்னல்களையும், இடர்களையும் அனுபவித்து இருப்பார்கள் என்பதை யுத்தவடுக்கள் மூலம் உணர்ந் துள்ளோம். மொனறாகலை மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து சமா தானத்தை ஏற்படுத்துவதற்கான செயல்திட்டம் ஒன்றினை அமுல்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மனிதநேய அமைப் புக்களின் ஒன்றியத்தின் தலைவர் சு.பரமநாதன்,அரச சார்பற்ற இணையத்தின் உபதலைவர் வீ.ஸ்ரீசக்தி வேல் உட்படப் பலர் கருத்துரையாற்றினர். (உ-16)

# சமாதானத்தை உறுதிசெய்ய சட்டவிதிகள் அவசியம்

## பரிசுத்த பாப்பரசர் தெரிவிப்பு



(ரோம்)

சர்வதேசமெங்கும் இடம் பெற்று வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கணடு சமாதானத்தை உறுதி செய்வ தற்கு சர்வதேச சட்டவிதிகள் உரு வாக்கப்படவேண்டும் என்று பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

வத்திக்கான் புனித சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நேற்று முன்தினம் புதுவருடத் திருப்பலி ஒப்புக்கொடுத்த பாப்பரசர் ஐக்கிய நாடுகளின் அனுபவரீதியான செயற் பாடுகள் மூலம் சிறந்த பலாபலன்கள் கிடைத்து வருவதா கவும் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மானுடத்தின் தனித்துவத்தைப் பேணும் வகையிலும், சகல சமூகங்களையும் ஒற்றுமைப்படுத்தும் வகையிலும் பணக்காரர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையில் நல்லு றவுகளை வளர்க்கும் வகையிலான புதிய சட்டவிதிகள் உருவாக்கப்படுவது இன்றைய தலையாய கடமைகளாக உள்ளது என்று கூறினார். (ம)

# பொலிஸாரின் இலவச பயணச்சலுகை ரத்து!

(கொழும்பு)

இதுவரை காலமும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருந்த இலவச பயணச்சலுகைகள் நேற்றுமுன்தினம் முதல் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா அறிவித்துள்ளார்.

நாடுதழுவிய ரீதியில், பொலிஸாருக்கு வழங்கப்பட் டிருந்த இச்சலுகையை பொலிஸார் தவறான வழிகளில் பயன்படுத்தி வருவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே பொலிஸ்மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப் பித்துள்ளதாகவும், இது தொடர்பான அறிவித்தல்களை சகல பொலிஸ் உயரதிகாரிகளுக்கும் அவர் அறிவித்துள் ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## திசைரி தியானம்

### அமரத்துவம்

எப்பொழுதும் நேர்மையாகவே இரு. ஒரு பொழுதும் அப்பாதையிலிருந்து நழுவாதே. நிமிர்ந்து நில். மனோதிடத்துடன் இரு. எதற்கும் அஞ்சாதே. உண்மையைக் கைக்கொள். எங்கும் எப்புறமும் அதைப் பரப்பு. பறைசாற்று. ஆன்மீகப் பாதை யில் முன்னேறு. ஒளி உன்னுள்ளே இருக்கிறது. மனதை இறைவனிடம் செலுத்து. உலக சகோத ரத்துவத்தை வளரச்செய். எளிமை அடக்கம் இரண டையும் கைக்கொள். நீ அமரத்துவம் எய்துவாய்.

சுவாமி சிவானந்தர்

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம்

## அமைக்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கோரிக்கை விடுத் துள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இதுவரை காலமும் எரிபொருள் நிரப்பு நிலையம் இல்லாததால் இப்பகுதியி லுள்ள விவசாயிகள் மற்றும் வாகன உரிமையாளர்கள் எனப் பலதரப்பட்டோரும் எரிபொருளைப் பெற்றுக்கொள் வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இப்பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒனறை அமைப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு உதவிகள் மற்றும் அனுமதியை வழங்குமாறு யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-43)

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு ஆங்கிலக்கல்விப் பயிற்சி வகுப்பு

(மருதங்கேணி)

வன்னிப் பிரதேசத்தில் உள்ள ஆரம்பக்கல்வி ஆசிரி யர்களுக்குத் தற்போது ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வன்னியில் ஏற்பட்டுள்ள ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறையினை நிவர்த்திசெய்யும் முகமாக 2003ஆம் ஆண்டு முதல் ஜி.ரி.சற் நிறுவனத்தினரால் மேற்படி வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ் ஆண்டில் மேலும் 300 ஆரம்பக்கல்வி ஆசிரியர் களுக்கு ஜி.ரி.சற் நிறுவனத்தினரால் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாக அந்நிறுவனத்தினர் தெரி வித்துள்ளனர். (உ-35)

# வடக்கு - கிழக்கில் சுமார் 1இலட்சம் சிறார்கள் பாடசாலை செல்வதில்லை

(மட்டக்களப்பு)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கை கள் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 9ஆயிரத்து 662 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை என அண்மையில் யுனிசெப் சிறுவர் நலத்திட்டச் சமூகப்பணி உத்தியோகத்தர்கள் திரட்டிய புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் யுனிசெப் சிறுவர் நலத்திட்டச் சமூகப்பணி உத்தியோ கத்தர்களால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களின் விபரங்கள் அண்மையில் சேக ரிக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் கடந்தகால யுத்த நடவடிக்கை காரணமாக வடக்கு - கிழக்கில் 94ஆயிரம் சிறுவர்களும், மட்டக்களப்பில் 9ஆயிரத்து 662 சிறுவர்களும் பாடசாலை செல்லாதிருப்பதுடன், 15 சதவீதமான சிறுவர்கள் பாட சாலையில் இருந்து இடைவிலகியுள்ளனர். அத்துடன், 33 சதவீதமான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக் கப்பட்டுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது. (உ-18)

### கடந்த ஆண்டு யாழ்.மாவட்ட

# வீதிப் புனரமைப்புப் பணிகளுக்கு 55.5 மில்லியன் பயன்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வீதிகளைப் புனரமைக்கவென கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட 32.5 மில்லியன் ரூபா நிதியைக் கொண்டு 510 வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை 2002 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படாத திட்டங்களைப் பூரணப்படுத்துவதற்கு மேலதிகமாக 23 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான வேலைகளும் பூர்த்தியடைந்து விட்டதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஆயினும். கடந்த ஆண்டில் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி மூலம் திருப்பிகரமான முறையில் வேலைத் திட்டங்களை மேற்கொள்ள முடியவில்லை எனவும் இவ்வாண்டிற்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்த விளக்கமான அறிவுத்தல்கள் எவையும் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்டப் பொறியியலாளர் தெரிவித்தார்.

(உ-4)


## வலம்புரியின் அனுசரணையுடன்

வட்டுக்கோட்டை-சங்கரத்தை

பாலன் மில் உரிமையாளர்

இராசையா சோமசுந்தரம்

அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்

## கவிதைப் போட்டி -2004

1ம் பரிசு தங்கப் பதக்கம்

2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்

3ம் பரிசு வெண்கலப் பதக்கம்

இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்

"தமிழா உனக்கேன் இக்கதி"

### விதிகள்

- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.


## விண்ணப்பங்களை அனுப்பலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் கோரப்பட்ட வருகை விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்களை உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கே அனுப்பி வைக்குமாறு நிறுவன இயக்குநர் கேட்டுள்ளார்.

இதுவரை விண்ணப்பங்களை அனுப்பாதவர்கள் யாழ்.உயர் தொழில் நுட்பநிறுவனம், பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## பஸ் - ஆட்டோ விபத்து

(கந்தர்மடம்)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் பஸ்ஸும் ஆட்டோவும் நேருக்கு நேர் மோதின.

நேற்று மதியம் இடம்பெற்ற இவ் விபத்து சம்பவத்தில் ஆட்டோ சேதமடைந்தது. பஸ் சாரதியும் ஆட்டோ சாரதியும் விபத்தில் காயமடைந்துள்ளனர். (த-96)

---

## பொலிஸாரின்...

ளது. 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

கல்வித்துறையில் உள்ள குறைபாடுகளே இத்தகைய நிலைமைகளுக்கு காரணம் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, தான் ஆரம்பித்த புதிய கல்விச் சீர்திருத்தம் தற்போது நடைமுறைப்படுத்தும் முறை குறித்து தன்னால் திருப்தியடைய முடியாதென்றும் கூறினார். (இ)

---

## மினிபஸ்ஸை...

பேருந்தும், மினிபஸ்ஸும் ஒன்றை ஒன்று முந்திச் செல்வதில் ஏற்பட்ட தகராறினால் மினிபஸ் சாரதிகள் வீதியின் நடுவே தமது வாகனங்களை நிறுத்தி வழி மறிப்பில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது பேருந்தின் சாரதியை மினிபஸ் சாரதிகள், நடத்துநர்கள் தாக்க முற்பட்டனர்.

பேருந்தில் பயணம் செய்த பயணிகளும் அப்பகுதியில் நின்ற பொது மக்களும் இணைந்து முறுகல் நிலையை ஒருவாறு சுமுகநிலைக்குக் கொண்டு வந்தனர்.

மேற்படி வழிமறிப்பினால் சிறிது நேரம் வீதிப் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது.


(த-246)

---

## முஸ்லிம்களின்...

ஆதரவு வழங்குவதென்ற முடிவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாகச் செயற்படுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



28 வருடங்களாக நிரந்தர இடமில்லாது கஷ்டப்பட்ட சங்கானை சலேசியார் முன்பள்ளிக்கு நிரந்தரமான காணி கிடைக்கும் பொருட்டு மாண்புமிகு கௌரவ இந்து கலாசார அமைச்சர்

## தி. மகேஸ்வரன்

அவர்கள் வழங்கிய நிதியில் காணி வாங்கியுள்ளோம். எனவே கௌரவ அமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

சலேசியார் முன்பள்ளி
பெற்றோர் ஆசிரியர் சங்கம்
சங்கானை

(8070)


## ஜே.வி.பி கூட்டு...

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இல்லாமல் போகும் சாத்தியம் உருவாகலாம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை இல்லாமல் செய்வதற்காகவே மக்கள விடுதலை முன்னணி தற்போது முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. மேலும் மக்கள் விடுதலை முன்னணியினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது பற்றி பேசியபடியே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களைப் பெரும் சூழ்ச்சி வலையில் வீழ்த்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேரும் நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களை மதித்து, அவற் றையும் செயற்படுதத வேண்டும் என்பதை வலியுறுத்தும் முக மாகவே தற்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

(த-18.61)

## மஹஜன சம்பத 1578

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Y | 5 | 5 | 6 | 7 | 5 | 9 |


## மரண அறிவித்தல்

## பாவிலு றோமாம்பிள்ளை

மணற்காடு குடத்தனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலு றோமாம்பிள்ளை 02-01-2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றோமாம்பிள்ளை றோசம்மாவின் அன்புக் கணவரும், பிரான்சிஸ்கம்மா, திரேசாபுஸ்பம், காலஞ்

பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.

- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

## கூப்பன், உறுதியுரை நாளைய வலம்புரியில்

# மரண அறிவித்தல்

## சிவஸ்ரீ கா.சாம்பசதாசிவக் குருக்கள்

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில் பிரதம குருவும் ஸ்ரீமதி கௌரியாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும், பாலச்சந்திரசர்மா (ஜேர்மனி), சோமதேவக் குருக்கள், கோபாலசர்மா, சிவபாலசர்மா (ஜேர்மனி), பவானி, கார்த்தியாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும்

காலஞ்சென்ற கரிகரசர்மா, ஜெகதீஸ்வரசர்மா (நியூசிலாந்து), ஜெயந்தி, பவானி, மாலா உமா ஆகியோரின் பெரிய மாமனாருமான கார்த்திகேய சாம்பசதாசிவக்குருக்கள் நேற்றைய தினம் (02-01-2004) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை நீர்வேலி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
சிவஸ்ரீ சா.சோமதேவக் குருக்கள்

ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்,
நீர்வேலி.

(சி-7087)

## முஸ்லிம்களின்...

ஆதரவு வழங்குவதென்ற முடிவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாகச் செயற்படுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் மூன்றாந் தரப்புக் கோரிக்கை முக்கியத்துவம் இழந்து வரும் நிலையில் முஸ்லிம் மக்களின் உரிமைகளும் அபிலாசைகளும் புறந்தள்ளப் படுவதாகவும், குற்றஞ் சாட்டப் பட்டுள்ளது.

இந் நிலையில் அரசியல் ரீதியாக முஸ்லிம்களுக்கு இருக்கும் பலத்தை ஒரே சக்தியாக பிரயோகிப்பதே அதற்குத் தீர்வாக அமையுமென்றும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முஸ்லிம்மக்களின் தேசியத் தலைமை ரவூப் ஹக்கீமினாலேயே வழிநடத்தப்படுமென்ற உறுதிப்பாடும் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேரம் பேசும் பலம், தென்னிலங்கை அரசியலுக்குள் பெரும் நெருக்கடியை உருவாக்குமென்று அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1ல் - 11 வரை சிறந்த ஆசிரியர்கள். வகுப்பில் கூடியது 15 மாணவர்கள். GRAMMAR SPOKEN ENGLISH, மேற்படிப்புவரை. பதிவுக்கு

**அதிபர் விக்னேஸ்வரன் ஆச்சாரி**
**426(302) K.K.S வீதி**
**யாழ்ப்பாணம்**

(8071)


காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றோமாம் பள்ளை றோசம்மாவின் அன்புக் கணவரும், பிரான்சிஸ்கம்மா, திரேசாபுஸ்பம், காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லாஸ், தங்கம், தேவதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜோசப் அந்தோனிப்பிள்ளை, ஆபிரகாம் பெனடிக் மேரிதிரேசா, எல்.பி.பி. மரியதாஸ், ஜெயமங்கலநாயகி ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03.01.2004 இன்று மாலை 4மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் மணற்காடு புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மணற்காடு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
மணற்காடு (சி-7086) குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.